Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 3 யாழ்ப்பாணம் சோபகிருது வைகாசி 8 ஆம் நாள் துல்ஹஜ் 27 (22-5-63) புதனகிழமை இதழ் 101

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட
ஒரு வருடத்துக்கு ரூபா 40-00
6 மாதத்துக்கு ரூபா 21-00
3 மாதத்துக்கு ரூபா 11-00

# வவனியாவில் மூவர் படு கொலை!

## காணித் தகராறு துப்பாக்கிச் சூட்டில் முடிவு

வவனியா, செவ்வாய்

**வவனியாவில் பூவரசங்குளத்திலிருந்து நான்காவது மைல் கல்லடியில் நேற்றுக் காலை நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் மூன்றுபேர் கொல்லப்பட்டனர். காணித் தகராறு காரணமாகவே இச்சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.**

மூவரும் ஸ்தலத்திலேயே மாண்டதாகச் சொல்லப்படுகிறது. ஒருவர் வீதியிலும், மற்றவர் வயலிலும் மற்றவர் வயலிலுள்ள காவல்கொட்டிலிலும் இறந்து கிடந்தனர்.

இவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களென்றும் மாமன், மருமகன், மைத்துனன் ஆகிய மூவருமே கொலையுண்டவர்களென்று கூறப்படுகிறது. கொல்லப்பட்டவர்களில் ஒருவர் எட்டுக் குழந்தைகளுக்குத் தந்தையெனச் சொல்லப்படுகிறது.

இக்கொலை சம்பந்தமாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

கொலைச் சம்பவம் பற்றிய செய்தி வவனியாப் பகுதியில் காட்டுத் தீ போல் பரவியதும் பெருந்திரளான மக்கள் சம்பவம் நடந்த இடத்துக்குச்

(5-ம் பக்கம் பார்க்க)

# "மன்னர் வவனியாவும் சிங்கள பகுதியாகலாம்!"

## முருங்கன் கூட்டத்தில் தமிழரசு கட்சித் தலைவர்கள் எச்சரிக்கை

எருக்கலம்பிட்டி, செவ்வாய்

"மன்னர் வவனியாப் பகுதிகளில் சிங்களமக்களைக் குடியேற்ற அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. தமிழ்மக்களுக்கு விமோசனந் தரக்கூடியது தமிழரசுக் கட்சியே" என்று திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம் முருங்கனில் நடைபெற்ற தமிழியக்கப் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர். இக்கூட்டத்திற்கு திரு. பிலிப். திருச்செல்வம் தலைமைவகித்தார்.

ஜனைப் மசூர் மௌலானு பேசுகையில், "கிழக்கு மாகாணத்தில் தமிழ்ப் பிரதேசமான கந்தளாய், அம்பாறை ஆகிய இடங்களைச் சிங்களப் பிரதேசமாக்கிவிட்டனர். எம்மவர்கள் பதவி உயர்வுக்காக சிங்களத்தைப் படித்து தமிழினத்தைக் காட்டிக்கொடுக்க முயல்கிருர்கள்" என்று குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசியதாவது:

சரித்திரத்திற்கு முன்பே வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமிழருக்குச் சொந்தமாக இருந்து வந்திருக்கின்றன. மல்வத்தை ஓயா என்னும் ஓர் திட்டம் மன்னருக்கு வந்தால் மன்னரும் சிங்களப்பிரதேசமாகிவிடும்.

நாம் நில்வுரிமை, மொழியுரிமை, வாக்குரிமை, கல்வியுரிமை, தொழில் உரிமை என்பன இழந்து வாழ்கிறோம். சுதந்திரம்பெற எமது கட்சி திட்டம் தயாரித்துள்ளது. இத்திட்டம் வெற்றிபெறவேண்டுமானல் நம்மிடமுள்ள பிரிவினைகள் அகலவேண்டும். எமக்குள்ள ஒரே ஒரு வழி போராட்டம்தான்.

நாம் கஷ்டப்பட்டால்தான் வெற்றியைப்பெறமுடியும்.

போராட்டத்தைப் பலப்படுத்தும் நோக்கத்துடன் ஒவ்வொரு கிராமத்திலும் கட்சிக்கிளைகள் ஆரம்பிக்கப்படவேண்டும். இவ்வாறுசெய்வதன்மூலமே நாம் சிறை சென்றாலும் நமக்குப் பின்னல் உள்ளவர்கள் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தமுடியும்.

'மொழிப்பிரச்னை தீர்ந்துவிட்டதாகக் கூறும் பிரதமர் எதற்கு மொழிப் பிரச்னையை ஆராய அலரிமாளிகையில் மகாநாடு கூடவேண்டும்? என்று திரு. அமிர்தலிங்கம் கேட்டார்.

மன்னர் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோன், நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், மூதூர் எம். பி. ஜனப் எம். ஈ. எச். முகமது அலி, திருவாளர்கள் ஜி. பி. வின்சன், ஆர். எம். ராமையா, ஜி. பெனடிக்ற் ஆகியோரும் பேசினர்.

# பொருளாதார அபிவிருத்தியின்றேல் சுதந்திரம் பயனற்றதாகும்

## தொழிற்பேட்டை திறப்பு விழாவில் பிரதமர் உரை

கொழும்பு, செவ்வாய்

"நாட்டை ஆட்சிசெய்த ஏகாதிபத்தியவாதிகள் கைத்தொழிலை அபிவிருத்திசெய்யவில்லை. இதனல் எமது வருவாய்க்கு தேயிலையையும், ரப்பரையும் நம்பியிருப்பதுடன் எல்லாப் பொருள்களையும் இறக்குமதி செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இப்பொழுது நிறுவும் கைத்தொழிற் பேட்டை ஒரு பரீட்சார்த்திகரமானதாகும். இது வெற்றியளித்தால் நாட்டின் பல இடங்களிலும் கைத்தொழிற் பேட்டைகள் அமைக்கப்படும். பொருளாதார அபிவிருத்தி ஏற்படாவிடில் நாம் சுதந்திரமடைந்ததில் பயனில்லை" என்று பிரதம மந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா எக்கலை கைத்தொழிற் பேட்டையைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

பிரதமர் திறப்பு விழாவில் மேலும் பேசியதாவது:-

கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு, அரசாங்கம் வேண்டிய வசதிகள் எதுவும் செய்து ஊக்கமளிக்கவில்லை என்று உள்நாட்டுப் பத்திரிகைகள் குற்றம் சாட்டியுள்ளன. ஆனல் இது உண்மையற்றதாகும். இலங்கையில் ஆரம்பிக்கப்படும் கைத்தொழில்களுக்கு அரசாங்கம் வழிகாட்டியாக இருப்பதுடன் உதவியும் செய்துவருகின்றது. இந்தக் கைத்தொழிற் பேட்டை, காலஞ்சென்ற பிரதமரால் திட்டமிடப்பட்டதொன்ருகும். ஆனல் இதன் கோலாகலமான திறப்பு விழாவை அவர் கண்டுகளிக்கமுடியவில்லை.

நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்திசெய்யும் பொருட்டு நமது அரசாங்கம் கைத்தொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்துவருகின்றது. மூலப் பொருட்களை இங்கு உற்பத்தி செய்வதற்கு அடுத்தபடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படிச் செய்யின் கிராமந்தோறும் கைத்தொழில்கள் வளர்ச்சியடையும்.

இத்திட்டத்திற்குபதினெட்டு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இத்தொழிற் பேட்டை சிறந்த முறையில் இயங்கி 40 கைத்தொழில்கள் இங்கே நடைபெறமுடியுமென்றும் கைத்தொழில் மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா பேசுகையில் குறிப்பிட்டார்.

இத்திட்டம் அமெரிக்க உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. அமெரிக்கத் தூதர் செல்வி பிரான்ஸிஸ் வில்லியும் விழாவிற்கு பிரசன்னமாயிருந்தார்.

# மூதூரில் தமிழியக்கம்

## 25-ம் திகதி ஆரம்பம்

திருக்கோணமலை, திங்கள்

இம்மாதம் 17, 18, 19-ம் திகதிகளில் திருக்கோணமலை, மூதூர்த் தொகுதிகளில் நடைபெறவிருந்த தமிழரசுக் கட்சியின் எல்லாம் தமிழியக்கக் கூட்டங்கள் இம்மாதம் 25, 26, 27-ம் திகதிகளில் திருமலை, மூதூர் தொகுதிகளில் நடைபெறவிருக்கின்றது.

திரு. எஸ. ஜே. வி. செல்வநாயகம் உட்பட எல்லாத் தமிழரசுப் பிரதிநிதிகளும் இப்பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொள்வர், திருகோணமலைத் தொகுதியில் நடைபெறும் கூட்டங்கள் திருமலைப் பிரதிநிதி திரு. என். ஆர். இராஜவரோதயம் தலைமையிலும், மூதூர் தொகுதியில் நடைபெறும் கூட்டங்கள் மூதூர் முதல் பாராளுமன்றப் பிரதிநிதி ஜனப் எம். ஈ. எச். முகமதலி தலைமையிலும் நடைபெறும்.

# இலவச படக்காட்சி

தொல்புரம், செவ்வாய்

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய வாசிகசாலை ஆதரவில் நிலைய விளையாட்டு மைதானத்தில் ஜெர்மன் தகவல் பகுதியினரால் இலவச சினிமாப்படம் காண்பிக்கப்பட்டது.

நெற்பயிரில் உண்டாகும் சகல களைப்புல்லையும் அழிப்பதற்கு புதிய ஜெர்மன் மருந்து

சர்க்கோபர்

BAYER

SURCOPUR
Agents

T'GRAMS ROYAEL ROYAL DISPENSARY PHONE 397 JAFFNA

## எச். எஸ். ஸி.

பல்கலைக் கழக புகுமுக வகுப்பு

இலங்கையில் சிறந்த, நவீன முறையில் சகல கலைப்பகுதி, விஞ்ஞானப் பகுதிப் பாடங்களும் ஆங்கிலத்திலும் தமிழிலும் கடிதம் மூலம் போதிக்கப்படும்.

விபரங்களுக்கு:

**யூனைட்டட் இன்ஸ்டிடியூட்ஸ்**

நெல்லியடி, கரவெட்டி.


### தேவை

மனேச்சர். வயது 30 முதல் 50 வரை. ஆங்கில சிரேஷ்ட தராதரப்பத்திரம் அல்லது அதற்குச் சமமான பரீட்சை சித்தியுடன் கணக்கு வைக்கும் அனுபவம் வாணிப கணக்கு தேர்ச்சி பணியாளர் நிர்வாக அனுபவமுள்ளவர்.

சம்பளம் 170—3ℓ0 / 10 x 13

எல்லாம் உட்பட.

பிணை ரொக்கம் 2000-00 ஆதனம் அல்லது பற்றுதிப் பிணை 5000-00.

விண்ணப்பப்பத்திரங்கள் சொந்தக் கையெழுத்தில் முந்திய உத்தியோக அனுபவங்கள், கல்வித் தகைமைகள் பிறந்த திகதி, தபால்விலாசம். மூன்று நற்சாட்சிப்பத்திரங்களுடன் 5-6-63க்கு முன்பதிவு தபாலில் நிர்வாக காரியதரிசிக்கு அனுப்ப வேண்டும்,

சி. கனகசபாபதி
தலைவர்

வலி. கிழக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கசமாசம், நீர்வேலி.

1013

## வரி விளம்பரம்

## கைரேகை சாஸ்திரம்

பிரபல கைரேகை நிபுணர் புரபசர் வி. கே. ஜி. விந்தா இப்பொழுது யாழ்ப்பாணம் பரணி ஹோட்டலில் தங்கியிருக்கிறார்கள். உங்கள் பலாபலன்களைக் கைரேகை மூலம் கேட்டறியுங்கள். 1012

### வாடகைக்கு

புல்டோசர் - மழை பெய்து நிலம் இழகிய நேரம் எங்கள் 'கற்றபில்லர்' புல்டோசர் கண்டாவளை, புளியம்பொக்கணையில் வேலை செய்கிறது. வெலிக்கண்டல் சந்தியில் எங்கள் ஆபிசில் புக்பண்ணுங்கள். 1105

வண்ணார்பண்ணை கே. கே. எஸ். ரோட்டில் வசதியான கடை நெ. 358 வாடகைக்கு இருக்கிறது விபரங்களுக்கு நெ. 356-ல் விசாரிக்கவும். 1107

### தேவை

பாரமேற்றிப் பால்கொண்டு சயிக்கிளில் ஓடக்கூடிய இரண்டு தேகமிடமுள்ளவர்கள் தேவை. விண்ணப்பங்கள் மே மாதம் 25-ம் திகதிக்கு முன், கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும். சயிக்கிள் ஓட்டப் பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் திருநெல்வேலி அரசினர் விவசாயத் தோட்டத்தில் 27-ந் திகதி மாலை 4.30 மணிக்கு பிரசன்னமாக வேண்டும். வேதனம் ரூ. 70/- பிணை ரூபா 50/- காரியதரிசி, யாழ் மாவட்ட கூட்டுறவு பாற்பண்ணை சமாசம், இணுவில். 1110

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் குருநகர் அர்ச். சந்தியோருமையோர் கோவில் வளவில் முதிர்ந்த இரண்டு மலைவேப்பமரங்கள் விற்பனைக்கு உண்டு.

விபரம் அறியவிரும்புவோர் மேற்படி கோவில் கட்டளைக் குருவானவரிடம் 26-5-63 ஞாயிற்றுக்கிழமைக்கு முன் நேரில் அறிந்துகொள்ளவும். 1106

ஆசிரியருக்குக் கடிதங்கள்

# நவராத்திரி கந்தசஷ்டி சிவராத்திரி விரதங்கள்

சோபகிருது வருடத்தில்நிகழவிருக்கும், சைவசமய சம்பந்தமான சில முக்கிய விரதங்கள் விழாக்கள் பற்றிக் கருத்து வேற்றுமை இருப்பதால், யாம் சிவாகம நூற்பயிற்சிக்கு இரு பெரியார்களை இவ்விரத நாட்களைப் பற்றித் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்குமாறுகேட்டோம். வேண்டுகோளுக்கிசைந்து இவ்விரு பெரியார்கள் எழுதிய விடைகளைப் பொது மக்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

மகா சிவராத்திரி விரதம் சைவ மக்களுக்கு மிகமிக முக்கியமானது. மகா சிவராத்திரி விரதத்தையும், விழாவையும் திருக்கேதீஸ்வரத்தில் நாம் ஒவ்வோராண்டும் மாசி மாதத்தில் கொண்டாடி வருவதை சைவமக்கள் நன்கறிவர். சிவராத்திரி விரதம் பற்றிச் சிவாகமங்கள் கூறும் நூற்றுணிபை இவ்விரு பெரியார்கள் எழுதிய கடிதங்கள் நன்கு விளக்குகின்றன. ஆதலினல் நாம் மகா சிவராத்திரியை சேபாகிருது வருடம் மாசி மாதம் 29-ந் திகதி (12-3-64) வியாழக்கிழமை கொண்டாட நிச்சயித்துள்ளோம்.

நவராத்திரி விரதமும், கந்தசட்டி விரதமும் இவ்விரு கடிதங்களில் குறிப்பிட்ட தினங்களில் தான் திருக்கேதீஸ்வரத்தில் ஆரம்பித்து நடைபெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம். இருபெரியார்களின் கருத்தையும் இங்கு தந்திருக்கின்றோம்,

க. வைத்தியநாதன்

இது சம்பந்தமாக தருமபுர ஆதீனம் வேதசிவாகம பாடசாலைத் தலைமையாசிரியரும் சிவா வித்துவானுமாகிய எஸ். சுவாமிநாத சிவாசாரியார் தெரிவித்த கருத்து பின் வருமாறு:—

விநாயக சதுர்த்தி, நவராத்திரி, கந்தசஷ்டி, என்னும் விரதங்கள், சாந்திரமானத்தாலும், கேதாரவிரதம், சிவராத்திரி, மஹோற்சவ தீர்த்தம் முதலியவைசௌரமான தாலும் அனுட்டிக்க வேண்டுமென்று சிவாகமங்கள் கூறுகின்றன.

நிகழும் சோப கிருது வருஷம் புரட்டாதி மாதம் இரண்டு அமவாசைகள் வருவதால் அது அதிக மாதமாகிறது. ஆகையால் அதிமாதமாகிய புரட்டாதியை நீக்கி, ஐப்பசி முதலாந் திகதி (18-10-63) நவராத்திரி ஆரம்பம். கார்த்திகைமுதலாந் திகதி (16-11-63) கந்தசஷ்டி விரத ஆரம்பமும் அநுட்டிப்பது முறையாகும். மகா சிவராத்திரி விரதம் சௌரமாசத்தில் அநுட்டிக்க வேண்டும் என்று சிவாகமங்கள் கூறுகின்றன.

சோபகிருது வருஷம் மாசி மாதம் 29-ந் திகதி (12-3-64) சிவராத்திரி பூஜையும் விரதமும் அநுட்டிக்கப் பட வேண்டும் என்பது சிவாகம சம்மதம். சிவாகம சீலர்கள், ஆஸ்திகர்கள் அனைவரும்சிவாகமங்களில் நிர்ணயிக்கப்பட்ட படி பூசை விழா, விரதங்களை அநுட்டித்து இம்மை மறுமைப் பயன்களைப் பெறுவார்களாக.

சிவானந்தகுருகுலம் பிரதம குரு அச்சுவேலி ச. குமாரசாமிக்குருக்கள் பின் வருமாறு தெரிவித்துள்ளார்.

சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் முதலாம் திகதி ஒரு அமவாசையும், 31-ல் ஒரு அமாவாசையுமாக இரண்டு அமாவாசைகள் வருகின்றன். உத்தரகாமி காகமம் சைவசிராத்த விதிப்படலத்திலும் இரண்டு அமாவாசை வரும் மாசம் குற்றமுள்ளது. பிதிர் தேவர்களால் நிந்திக்கப் படுவது, என்று கூறப்பட்டிருக்கின்றது. அதன்படி சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் அதிமாசதோஷமிருப்பதால் அதை நீக்கி ஐப்பசி மாதம் முதலாந்திகதி (18-10-63) ஆச்சுவச சுத்தப் பிரதமையில் நவராத்திரி பூஜாரம்பமும், கார்த்திகை மாதம் முதலாம் திகதி (16-11-63) கந்தசட்டி ஆரம்பமும் சொல்வதே ஆகம புராணதிகளுக்குச் சம்மதமாகும்

சைவர்களுக்கு சௌரமாசம் சாந்திர மாசம் இரண்டும் உடன்பாடேயாம். எந்தக்கர்மாவுக்கு எந்த மாசம் சொல்லப்பட்டதோ, எது அநுட்டானத்திலிருந்து வந்ததோ அந்தவிதமே நடத்த வேண்டும்.

சிவராத்திரியைச் சௌரமாசத்திலேயே அநுட்டிக்க வேண்டும் என்பதே ஆகமசம்மதம். சூரியன் கும்பராசியில் வரும் மாசிமாசக் கிருஷ்ணசதுர்த்த சிவராத்திரி யாகும். எனவும் உத்தரகாரணகமம் சிவராத்திரி விதிபடலத்தில் சௌரசமாசியில் வரும் சாந்திரமாச பால்குனகிருஷ்ண சதுர்த்தசியில் சிவராத்திரி விரதம் கொள்ளத்தக்கது. சாந்திரமாசத்தில் அநுட்டித்தல் குற்றமென்று செப்புகின்றது. ஆகையால் சிவராத்திரி சோபகிருது வருடம் மாசிமாதம் 29-ந் திகதி வியாழக்கிழமை அநுட்டிக்கத் தக்கது.

நவராத்திரி, கந்தசட்டி விரதங்கள் சந்தேகத்துக் கிடமின்றிசாந்திரமாசத்திலும், சிவராத்திரி சௌரமாசத்திலும் அநுட்டிக்கப்படல் வேண்டும் என்பது சிவாகம விதிகளால் நிச்சயமாகின்றது.

## பெயர் மாற்றம்

சின்னப்பு அரசரத்தினம் என்றழைக்கப்பட்டு வந்த நான் 22-5-1963 முதல் சின்னப்பு-அரசகுலஇரத்தினம் என அழைக்கப்படுவதுடன் அவ்வாறே கையெழுத்திடுவேன் என அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் அறிவிக்கின்றேன். சி. அரசகுல இரத்தினம், சங்குவேலி, மானிப்பாய். 1108

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபகிருது வருடம் வைகாசி மீ (24-5-63) 10-ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 12-15 மணி முதல் 2-4 5மணி வரை வரும் சுபமுகூர்த்த வேளையில்,

திருநிறை செல்வன் திரு. கந்தர் மகன் சின்னையா அவர்கட்கும் (கிராம சேவையாளர், தாவழை, இயற்றாலை), திருநிறை செல்வி வே. சிவகுரு (பிஸ்கால்) அவர்களின்புத்திரி இராசாத்தி அம்மாளுக்கும் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் சமூகம் தரும்படி வேண்டிக் கொள்ளுகின்றோம். 27-5-63 திங்கள் மணமகள் இல்லத்தில் வரவேற்பு உபசரணை நடைபெறும். (தனிப் பட்டமுறையில் அழைப்பு எவருக்கும் அனுப்பப்படவில்லை.) இப்படிக்கு வே. சிவகுருவும், புதல்வர்களும். கந்தரோடை ரோட், சுன்னகம். 1109

## தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தர'வாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## கும்பாபிஷேக முகூர்த்த சிறப்பு

16-5-63 ஈழநாட்டில் கும்பாபிஷேகம் என்னும் தலையங்கத்தில் நயினதீவு ஸ்ரீநாகபூஷணி அம்பாளுக்கு 3-6-63-ல் நடைபெறவிருக்கும் கும்பாபிஷேக முகூர்த்தம் சிறந்ததாவென.கோப்பாய்எஸ்.நடராஜ சர்மாவினல் எழுதப்பட்டிருந்தது. இதனல் சிலருடைய மனதில் எழுந்த சந்தேகத்தை நீக்கும்பொருட்டு இம்முகூர்த்தத்தில் தோஷங்கள் இல்லையென்பதை பிரம்மஸ்ரீ இ. சி. இரகுநாதய்யர் முதலான சோதிடர்களினதும் ஆகமசாஸ்திர அறிவுநிறைந்த குருமார்களினதும் ஆகம சாஸ்திர பிரமாணங்களைத் தருகிறோம்.

பிரபலாளிஷ்ட (நாச)யோகம் இருப்பதாக எழுதியிருந்தார். அன்றைய தினம் பிரபலாளிஷ்ட யோகம் இல்லை.

அக்நியோகம்: திங்கட்கிழமையும் ஷஷ்டி திதியும் கூடினற்றான் அக்நியோகம்.

கிரகப்பிரவேசம், கிரகாரம்பம், தேவப்பிரதிஷ்டை என்று வரிசைப்படுத்தியி ந்தார். பிரதிஷ்டைக்கிருக்கும் பேதங்கள் போல கிரகப்பிரவேசங்களுக்குப் பேதங்களில்லை.

வாக்கிய பஞ்சாங்கத்தில் அக்நியோகம் என்று காட்டியிருந்தார். அன்றைய தினம் வாக்கிய பஞ்சாங்கத்தில் அக்நியோகம் இல்லை.

இம்முகூர்த்தத்தில் இருக்கும் விசேட பலன்களை ஆராய்வாம். சோபகிருது வருஷம் உத்தமம். உத்தராயாணம் புகளுண்டு.

வைகாசிமாதம்- சர்வசித்தி, சுக்லபக்ஷம்- விசேட நன்மை, ஏகாதசிதிதி- பாக்கியவிருத்தி. திங்கள்– சௌபாக்கியம், சித்திரைநக்ஷத்திரம்-சத்துருநாசம், வரியானயோகம்- பொருள் வரவு, விட்டிகரணம்-மழைவிருத்தி, இடபலக்நம்– சௌபாக்கியம்,உதயகாலம்-காரியசித்தி

இவ்வாறான சிறப்புகள் அமைந்துள்ள இம்முகூர்த்தத்தில் மேலே நடராசர் மாவினல் காட்டியுள்ள தோஷங்கள் ஒன்றுமில்லையென்பதையும் இம்முகூர்த்தத்திலேயே திருவருளை முன்னிட்டு, முன் சபைதீர்மானித்தபடி வைகாசி 20-ம் திகதி 3-6-63 திங்கட்கிழமை அதிகாலை கும்பாபிஷேகம் நடைபெறுமென்பதை அறியத்தருகிறோம்.

நயினதீவு ஸ்ரீநாகபூஷணி அம்பாள், ஆலய தருமபரிபாலன சபை.

# வருமானம் அதிகரித்துள்ளது

கொழும்பு, செவ்வாய்

இவ்வருடம் முதல் மூன்று மாதங்களிலும் இறக்குமதிக்குச் செலவிடப்பட்ட பணத்தை விட ஏற்றுமதிமூலம் கிடைத்துள்ள வருமானம் அதிகமாக உள்ளது. ஜனவரி தொடக்கம் மார்ச் வரையான மூன்று மாதங்களில் 4259 லட்சம் ரூபாவிற்கு நாட்டிலிருந்து பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. அதேநேரத்தில் 3025 லட்சம் ரூபாவிற்கே வெளிநாடுகளிலிருந்து பொருட்கள் இறக்குமதிசெய்யப்பட்டுள்ளன. இவ்வருடம் இதனல் இறக்குமதியைவிட ஏற்றுமைதி 1233 லட்சம் ரூபாவிற்கு அதிகரித்துள்ளது. சென்ற வருடம் ஜனவரி தொடக்கம் மார்ச் மாதம் வரைக்கும் 447 லட்சம் ரூபாவே இறக்குமதியைவிட ஏற்றுமதிமூலம் கூடுதலாகக் கிடைத்தது.

# சிங்களம் மட்டுமா?

முல்லைத்தீவு பெரும்பாக இறைவரி உத்தியோகஸ்தர் காரியாலயத்தில் கூப்பன் புத்தகங்களை இடமாற்றஞ் செய்யப்போகும் அனைவருககும் சிங்களத்தில் மட்டும் அச்சிடப்பட்டிருக்கும் விண்ணப்பப் பத்திரங்களை வழங்குகிறார்கள். இந்த விண்ணப்பப் பத்திரங்களை நிரப்ப முடியாது பொது மக்கள் மிகவும் கஷ்டமடைகின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், வவுனியா பாராளுமன்றப் பிரதிநிதியும் இக்குறையைத் தீர்த்து வைக்கும்படி வேண்டுகிறேன்.

ச. பொ. சுவாமி.
முல்லைத்தீவு


## ஃபிரீடம்' மார்க் கற்பூரம்




**கற்பூரம் வாங்கும்போது**

**'ஃபிரீடம்' மார்க் கற்பூரம்.**

**என்றே கேட்டு வாங்குங்கள்.**

**இது ஓர் சிறந்த தயாரிப்பு**

தயாரிப்பாளர்கள்,
ஃபிரீ லங்கா இன்டஸ்ட்ரீஸ்.
மினுவாங்கொட.

# துருக்கியில் ராணுவ புரட்சி தோல்வி

அங்காரா, மே 21

துருக்கியில் ராணுவப்புரட்சி ஏற்பட்டதாகவும் உடனடியாகவே அது நசுக்கப்பட்டுவிட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

துருக்கியில் அமைதியான முறையில் ராணுவப் புரட்சி நடைபெற்று விட்டதாகவும் ராணுவச்சட்டம் பிறப்பிக்கப் பட்டுள்ளதாகவும் பார்லிமெண்ட் கலைக்கப்பட்டதுடன் அரசியல் கட்சிகளும் கலைக்கப்பட்டு விட்டதாக அங்காரா ரேடியோவில் முதலில் அறிவிக்கப்பட்டது. துருக்கியின் முப்படைத் தளபதிகளினால் வெளியிடப்பட்டதாக இரண்டு அறிக்கைகளை வானொலி ஒலிபரப்பியது.

சிறிது நேரத்தின்பின் அங்காரா ரேடியோவில் அரசாங்க அதிகாரியொருவர் ஒரு அறிக்கையை ஒலிபரப்பினார். ராணுவப் புரட்சி நசுக்கப்பட்டுவிட்டதாகவும் அரசாங்கம் நிலைமையைச் சமாளித்து வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். வதந்திகளுக்குச் செவிசாய்க்க வேண்டாமென்றும் ஆர்ப்பாட்டம் எதுவும் நடத்த வேண்டாமென்றும் அந்த அதிகாரி கேட்டுக்கொண்டார்.

---

## பால் குளிர்பதன தொழிற்சாலை

கோவை, மே 21

வயல்களில்எலிகள் தொல்லை அதிகரித்து வருவதுபற்றி ஆராய்ச்சிகள் நடைபெற்று வருவதாக விவசாய மந்திரி திரு. பி. கக்கன் தெரிவித்தார்.

இங்கிருந்து 30 மைல் தொலைவிலுள்ள சுல்தான்பேட்டையில் பால் குளிர்பதனத் தொழிற்சாலையை மந்திரிஆரம்பித்து வைத்தார். தஞ்சையிலிருந்து வரும் எலி உபத்திரவம்பற்றிய புகார்களைக் குறிப்பிட்ட அமைச்சர் விவசாயிகளுக்கு எலிகூண்டுகள் வினியோகிக்கப்படுகின்றன என்று சொன்னார்.

கோவையில் நிறுவப்பட்டுள்ள பால்பதன தொழிற்சாலையுடன் இணைந்ததுதான் சுல்தான் பேட்டை தொழிற்சாலை. தினமொன்றுக்கு ஆயிரம் லிட்டர் பால் குளிர்ச்சியாக்கப்பட்டு கோவை தொழிற்சாலைக்கு அனுப்பப்படுகிறது.

---

## பொற்கொல்லர்கள் உண்ணுவிரதம்

கல்கத்தா, மே 21

தங்கக் கட்டுப்பாடு உத்தரவு காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள பொற்கொல்லர்களில் நூற்றுக்கணக்கானவர்கள் சர்க்காரிடமிருந்து சலுகைகளும் நிவாரணமும் கோரி நாடெங்கும் 72 மணிநேர உண்ணுவிரதம் அனுஷ்டித்துள்ளனர் என்று அகிலபாரத பொற்கொல்லர் சங்கபொதுக் காரியதரிசி அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் நாட்டின் பலஇடங்களிலும் பொற்கொல்லர்கள் உண்ணுவிரதம் அனுஷ்டித்து வந்துள்ளனர். தங்கக் கட்டுப்பாட்டு விதிகளை தகுந்தவாறு திருத்துமாறும் நாட்டில் வேலையற்றிருக்கும் 25 லட்சம் பொற்கொல்லர்களுக்கு மாற்றுவேலை தருமாறும் அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் பொருட்டே இவர்கள் உண்ணுவிரதம் மேற்கொண்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## சர்வகட்சி கூட்டம்

### அண்ணுதுரை சம்மதம்

சென்னை, மே. 21

ஹிந்தியை எதிர்த்துப் போராட்டம் நடத்துவதுபற்றி ஆராய, சர்வகட்சிக் கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி சுதந்திர கட்சித் தலைவர் ராஜாஜி அனுப்பிய அழைப்பை, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அண்ணுதுரை ஏற்றுக் கொண்டார்.

இந்த சர்வ கட்சிக் கூட்டம் ஜூன் மாதம் 2-ந் திகதி சென்னையில் நடக்கவிருக்கிறது.

தமிழ் நாட்டிலுள்ள மற்றக் கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

---

## டி. டி. கே.-கென்னடி சந்திப்பு

வாஷிங்டன், மே 21

இந்திய பொருளாதார பாதுகாப்பு இணைப்பு மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி நேற்று அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன் எப்-கென்னடியை சந்தித்துப் பேசினர். இந்திய வெளிவிவகார இலாகா காரியதரிசி திரு எம். ஜே. தேசாயும் வாஷிங்டனிலுள்ள இந்திய ஸ்தானிகர் திரு. பி. கே. நேருவும் கலந்துகொண்ட இப்பேச்சுவார்த்தைகள் சுமார் 70 நிமிஷ நேரம்வரை நடைபெற்றது.

சீன ஆக்கிரமிப்பு சம்பந்தமான நிலைமைபற்றி ஜனதிபதி கென்னடிக்கு பூரணமாக எடுத்துக் கூறியதாகவும் உண்மை நிலையை அறிந்துகொண்டதாகவும் இந்தியாவுக்கு குறுகிய கால, நீண்டகால உதவிபற்றிப் பேசியதாகவும் திரு. டி. டி. கே. பின்னர் தெரிவித்தார்.

---

## கேள்வித்தாள் மாற்றம்

### சர்க்கரை பற்றுக்குறை காரணமாம்

மாங்கீர், மே. 21

சர்க்கரை பற்றுக்குறை காரணமாக கடைசி நிமிடத்தில் கேள்வித்தாளை மாற்றவேண்டிய நிலை ஏற்பட்டது. பகல்பூர் சர்வகலாசாலையின் பி. ஏ. பரீட்சையில் குடும்பக்கலை வினத்தாளை மாற்றவேண்டியதாயிற்று.

குடும்பக்கலை அனுபவபரீட்சையின் போது தேனீரையும் சில இனிப்புப் பண்டங்களையும் தயாரிக்குமாறு கோரப்பட்டிருந்தது. பற்றுக்குறை காரணமாகச் சர்க்கரை வினியோகிக்க முடியவில்லை. சர்க்கரை இல்லாமல் இனிப்புப் பண்டங்களையோ அல்லது உப்புப் பண்டங்களையோ தயாரிக்கும்படி மாணவிகள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

---

## நேருவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் இல்லை

### தி. மு. க. அறிவிப்பு

சென்னை, மே 21

பாரதப் பிரதமர் நேரு அடுத்தமாதம் தமிழ்நாட்டிற்கு வரும்போது, திராவிட முன்னேற்ற கழகத்தினர் கறுப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்யமாட்டார்கள் என்று தி. மு. க. தலைவர் திரு. அண்ணுதுரை அறிவித்துள்ளார்.

இதையிட்டு அவர் மேலும் கூறியதாவது:-

கழகத்தில் உள்ள பல வாலிபர்கள் கறுப்புக்கொடி காட்டத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனல் இன்றைய நிலையில், ஜனநாயகத்தை காப்பாற்றப் பாடு படுகிற ஒரே தலைவர் நேரு. ஹிந்தி பேசாத மக்களுக்கு அவர் அளித்த வாக்குறுதியை காப்பாற்ருமல் விட்டாலும், அவர் ஒரு ஜனநாயகவாதி தான்.

ஹிந்தியை எதிர்த்து நீண்டகால போராட்டம் நடத்த நாங்கள் திட்டமிட்டிருப்பதால், இந்த கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் இப்போ அவசியமில்லை.

---

## ஹிந்தி எதிர்ப்பு போராட்டம்

### தி. மு. க. தயார்!

சென்னை, மே 20

ஹிந்தி எதிர்ப்பு போராட்டம்பற்றி ஆராய ஜூன் 1-ம், 2-ம் திகதிகளில் கூடவிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தலைவர் சி. என். அண்ணுத்துரை தெரிவித்துள்ளார்.

செயற்குழு, பொதுக்குழு கூட்டங்கள் ஜூன் 6ம், 7ம், 8 ம் திகதிகளில் கூட்டப்படுமென்றும் அதன்பின் ஹிந்தி எதிர்ப்புப் போராட்ட திட்டங்கள் வெளியிடப்படும் என்றும் தெரியவருகிறது. போராட்ட திட்டங்கள் மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளதென்றும், ஏராளமான மக்கள் கலந்துகொள்ளும் விதத்தில் போராட்டத் திட்டம் அமைந்துள்ளதென்றும் தெரியவருகிறது.

---

## நீக்ரோ மாணவர் பாடசாலையிலிருந்து வெளியேற்றம்

பர்மிங்காம், மே 21

அலபாமாவில் பர்மிங்காம் நகரில் சமஉரிமை கோரி ஆர்ப்பாட்டம் செய்த காரணத்துக்காக ஆயிரக்கணக்கான மாணவர்களை பர்மிங்காம் கல்விச் சபை பாடசாலைகளிலிருந்து வெளியேற்றியுள்ளது. மற்றும் பலருக்கு தற்காலிகமாக தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பர்மிங்காம் நகரில் 34,000 நீக்ரோ மாணவர்கள் உள்ளனர். பாடசாலைகளைப் பகிஷ்கரிக்கும்படி நீக்ரோ மாணவர்களை நீக்ரோ தலைவர் ஒருவர் கேட்டுள்ளார்.

---

## காளைகளை அடக்க முயன்றனர்

### மூவருக்கு காயம்

மதுரை, மே. 21

இங்கிருந்து 13 மைல் தூரத்தில் உள்ள சமய நல்லூரில் நடைபெற்ற 'ஜல்லிக்கட்டு' என்னும் மாட்டுச்சண்டையில் 3 பேருக்குப் பலத்த காயம் ஏற்பட்டது. மூர்க்கமாகப் பாய்ந்துவந்த காளைகளைப்பிடித்து தடுத்து நிறுத்த முயன்றபோது தான் மூவருக்குக் காயம் ஏற்பட்டது. ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள மூவரில் ஒருவரின் நிலை ஆபத்தானதாக உள்ளதாம்.

இப்பகுதியில் ஜல்லிக்கட்டு என்பது சாதாரணமான பொழுதுபோக்கு விளையாட்டாகும். இந்த விளையாட்டுக்காகவே வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் நூற்றுக்கணக்கான காளைகளை அவற்றின் கொம்புகளிலும் கழுத்திலும் பணமுடிப்புக்களையும் இதர பொருள்களையும் கட்டிப்பரந்த வெளியில் விட்டுவிடுவார்கள். அந்தக் காளைகளை அடக்கிப் பிடிப்பவர்கள் பணமுடிச்சுக்களையும் இதர வெகுமதிகளையும் எடுத்துக்கொள்ளலாம்.

---

கொழும்பு, செவ்வாய்

குடிசை, சிறு கைத்தொழில்களுக்கு இதுவரை 13 லட்சம் ரூபா உதவி நன்கொடையாக கிராமமுன்னேற்றச்சங்க குடிசைக் கைத்தொழில் இலாகா வழங்கியிருக்கின்றது.

ஆயிரம் நெசவு நிலையங்களை அமைப்பதற்கு 1955 ல் தீர்மானிக்கப்பட்ட திட்டப்படி இவ் வருட இறுதிக்குள் ஆயிரம் நெசவுநிலையங்களும் வேலை செய்ய ஆரம்பித்துவிடும். இந் நிலையங்கள் 30,000 கைத்தறித்துணிகளை உற்பத்திசெய்யக்கூடியனவாக இருக்கும்.

---

# "தமிழ் மொழிக்கு ஆபத்து வந்துவிடவில்லை"

### தமிழ் நாடுமுதன் மந்திரி கருத்து

சென்னை, மே 21

ஆட்சிமொழிப் பிரச்னையில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வேண்டும் என்று தமிழ் நாடு முதன் மந்திரி திரு. கே. காமராஜர் நேற்று சென்னையில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

இந்தியை ஆதரிப்பவர்களும் ஆங்கிலத்தை ஆதரிப்பவர்களும் ஆட்சிமொழி மசோதாவை எதிர்க்கின்றனர். இந்தி ஆதரவாளர்களுக்கும் ஆங்கில ஆதரவாளர்களுக்கும் சமரச ஏற்பாடானதுதான் இந்த ஆட்சிமொழி மசோதா என்று திரு. காமராஜர் கூறினர்.

ஆட்சிமொழி மசோதாவினல் தமிழ்மொழிக்கு ஆபத்து வந்துவிட்டதாக சிலர் திரித்துக்கூறுகிருர்கள். இந்த மசோதாவினல் தமிழ்மொழிக்கு ஆபத்து ஒன்றும் வந்துவிடாது. தமிழுக்கு ஆபத்துவராது என்று கூறிய திரு. காமராஜர் இந்திமொழி பேசாத மக்கள் விரும்பும்வரை ஆங்கிலம் நீடித்திருக்கும் என்ற பிரதமரின் வாக்குறுதி இந்த மசோதாவில் இடம்பெற்றுள்ளதென்று கூறினர்.

தமிழ்நாடு நிதிமந்திரி திரு. எம். பக்தவத்சலம் பேசுகையில் ஆங்கிலம் காலவரம்பின்றி நீடித்திருக்குமென்று கூறினர்.

---

## கடமை தவறிய அதிகாரிகள்

### அரசாங்கம் நடவடிக்கை

புதுடில்லி, மே 21

நேபாவில் சீனப்படையெடுப்பின்போது கடமை தவறிநடந்த சில அதிகாரிகள் மீது இலாகா நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒரு வருமானவரி இன்ஸ்பெக்டர், ஒரு சீனியர்கிடங்கு இன்ஸ்பெக்டர், ஒரு நியாய விலைக் கடை இன்ஸ்பெக்டர், 3 கிடங்கு குமாஸ்தாக்கள், ஒரு தையற்காரர், 6 காவலாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சீனப்படை எடுப்பின்போது டர்ராங்கிலிருந்து ஓடிவிட்ட திரு. பி. கே. தாஸ் ஏற்கனவே வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார்.

திராப் டிவிஷனலில் மத்திய மராமத்து இலாகாவைச் சேர்ந்த ஒரு எக்ஸிகியூடிவ் என்ஜினியர், ஒரு உதவி என்ஜினியர் ஆகிய இருவரும் கடமைசெய்ய வேண்டிய இடத்திலிருந்து போய்விட்டதாயும் செய்யப்பட்ட புகார் மீது விசாரணை நடைபெற்று வருகிறது.

---

## மா சே துங்கின் ஆட்சி விரைவில் முடிந்துவிடும்

### அமெரிக்க எழுத்தாளர் ஹேஷ்யம்

லண்டன், மே. 21

சீனப்பிரதமர் சூஎன்லாய்க்கும் மா சே துங்கிற்கும், நேரில் அறிமுகமானவராகிய அமெரிக்க எழுத்தாளரும், 'சீனவின்' மேல் சிகப்பு நட்சத்திரம்' என்னும் நூலின் ஆசிரியருமான ஏட்கர் சினே, அண்மையில் வெளியிட்ட, நதிக்கு மறுபக்கம்' என்னும் நூலில் 70 வயதுடைய மாசேதுங்கின் நீண்டகால ஆட்சியின் முடிவு நெருங்கிவருகிறது என்று தெரிவித்துள்ளார்.

மா சே துங்கின் பின் லியூ சோ சி பதவிக்கு வருவார் என்று அமெரிக்க எழுத்தாளர் தெரிவித்துள்ளார்.

கோலன்ஸானல் பிரசுரிக்கப்பட்ட அவரின் நூலில், சீனப் பிரதமர் சூஎன்லாய் சீனவின் 70 கோடி மக்களையும் தலைமை தாங்குவதில் முதலாவது இடத்தை வகிக்கிருர் என்று எதிர்பார்க்கமுடியாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## பகாமாவுக்கு சுயாட்சி

லண்டன், மே 21

கரிபியனிலுள்ள பகாமாதீவுக்கு ஜனவரி மாதத்தில் உள்ளூர்சுயாட்சி அந்தஸ்து அளிப்பதென லண்டனில் நடைபெற்ற அரசியல் மகாநாடொன்றில் முடிவு செய்யப்பட்டுள்ளது. பகாமாதீவில் இரண்டு சபைகளைக்கொண்ட சட்ட மன்றம் அமைக்கப்படும் பிரதம மந்திரியுடன் எட்டு மந்திரிகளுக்கும் குறைவில்லாத மந்திரி சபையொன்று ஆட்சிபுரியும்.

---

## அண்ணுதுரை புதிய கழகம் அமைப்பார்

சென்னை, மே. 21

சட்டபூர்வமான முறையில் போராடுவதற்காக 'மக்கள் உரிமை கழகம்' என்ற புதிய அமைப்பை ஆரம்பிக்கப்போவதாக திராவிடமுன்னேற்ற கழக தலைவர் அண்ணுத்துரை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: தற்பொழுதுள்ள அரசாங்கம் மக்களின் எழுத்து உரிமை, பேச்சு உரிமை, எல்லாவற்றையும் சட்டங்கள் நிறைவேற்றிப் பார்ப்பதால் இப்புதிய கழகமூலம் உரிமைகளுக்காக போராடவேண்டும். புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் இந்த மக்கள் உரிமை கழகத்தில் டாக்டர்கள், என்ஜினியர்கள், உத்தியோகஸ்தர்கள் நேரடியாகப் பங்குபற்றி தங்கள் உரிமைகளை நிலைநாட்டும்பொருட்டு போராட முடியும்.

அண்ணுதுரையின் இந்த யோசனையை வரவேற்றுள்ள தமிழரசு கழக தலைவர் ம.பொ.சி திராவிடமுன்னேற்ற கழகத்தை உடனடியாக கலைத்துவிடும்படி யோசனை கூறினர்.

---

## கொள்ளையடிக்கும் மாணவர் கோஷ்டி!

கொழும்பு, செவ்வாய்

கடந்த சில வாரங்களாக, இரவு பகலாக அநேகதடவைகள் கொள்ளையடித்துவந்த மாணவர் கோஷ்டியொன்றை கொம்பனித்தெரு பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

யூனியன் பிளேஸ் பகுதியில் நடமாடும் இந்தக் கோஷ்டியில் நான்கு வாலிபர்கள் உள்ளனர்.

ஏராளமான பிறதேசத்தவர்கள் வீதிவழியே நடந்துசெல்லும்போது, தங்களுடைய விலையுயர்ந்த கைக்கடிகாரங்கள், பேனக்கள், பணம் முதலியன கொள்ளை யடிக்கப்பட்டதாக பொலிஸில் புகார்செய்துள்ளனர்.

இக் கோஷ்டியில், 15 வயதிற்கும், 17 வயதிற்கும் இடையிலுள்ளவர்களே இருக்கிருர்கள். இக் கோஷ்டியின் தலைவன், கொழும்பு பாடசாலையைச் சேர்ந்த ஓர் மாணவன் எனத் தெரியவருகிறது. இக் கோஷ்டியைச் சேர்ந்த மாணவர் இருவரின் பெற்ருேர்கள் தங்கள் பிள்ளைகளை 'இளைஞர் சங்கத்தில்' சேர்க்கும்படியும், அதனல் அவர்கள் பயின்று வேலை எடுக்கமுடியும் என்றும் பொலிசாரைக் கேட்டுக்கொண்டார்கள். அதன்படி அக் கோஷ்டியிலுள்ள இருவர் இளைஞர் சங்கத்தில் சேர்க்கப்பட்டனர்.

தனது பிள்ளையை கும்பனித் தெருவிலிருந்து வேறு இடத்திற்கு அனுப்பப்போவதாக கொள்ளைக் கோஷ்டித் தலைவனின் பெற்ருேர்கள் பொலிசாரிடம் தெரிவித்தார்கள்.

## மணி வாக்கு

ஒரு குடும்பம் வாழ்வதற்காக தனிஒருவர் சாகவும், நாடு வாழ்வதற்காக ஒரு குடும்பம் சாகவும், உலகம் வாழ்வதற்காக ஒருநாடு சாகவும் தயாராக இருக்க வேண்டும். இத்தியாகத்துக்கு ஆத்ம சுத்தியே முதற்படி. உள்ளம் தூய்மையாயிருப்பின், நம்கடமையை அவ்வப்போது சரியாக உணர முடியும்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELANADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம்சோபகிருது ஆண்டு வைகாசி மீ 8உ (22-5-63)

## தேசிய ஒற்றுமை

தேசிய ஒற்றுமையைப் பலப்படுத்த வேண்டிய அவசியத்தைப்பற்றி மந்திரிகள் இபோது உணர்ந்து அதைக் குறித்து ஆலோசிப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. நாட்டின் இன்றைய சில பிரச்னைகளைத் தீர்க்கதேசியஒற்றுமைஇன்றியமையாததென்பதை மந்திரிகள் அதிகமாக உணர்ந்து வருகிறார்களாம். ஜனநாயக அரசியல் அரிச்சுவடியின் முதல்பாடம் தேசிய ஒற்றுமை. இதை இதுவரை உணராமல், கட்சி நலனுக்காகவும் சுயநலனுக்காகவும், வகுப்பு நலனுக்காகவும், தேசிய நலனைப் புறக்கணித்ததால்தான், சுதந்திரம் பெற்று 15 வருடங்களாகியும் நாட்டில் முன்னேற்றமெதுவுமின்றிப் பொது மக்கள் பல இன்னல்களுக்கும் இன்று உட்பட்டுத் தவிக்கின்றார்கள். இந்த உண்மையை இப்போதாவது அரசாங்கக் கட்சியினர் உணர்ந்து இதுவரை செய்த தவறுகளை திருத்தவும், ஆக்கமுறைகளில் நடவடிக்கை எடுக்கவும் தேசாபிமானத்துடன் முன்வருவதாயின் அதுபலவிதங்களிலும் நல்லபலன் அளிப்பதாக இருக்கும்.

மந்திரிகள் மட்டும் கூடி முடிவு செய்யக்கூடிய விஷயமல்ல இது. அரசாங்கக்கட்சி மட்டுமன்றி, பொதுமக்களின் பிரதிநிதிகள் அனைவரும் கட்சி முதலிய வேறுபாடுகளைமறந்து பரஸ்பரம் விட்டுக் கொடுத்து தீர்மானிக்க வேண்டியதாகும். இன்று அரசாங்கக்கட்சியைச் சேர்ந்த எம். பிக்களும் செனெட்டர்களும் 'அலரிமாளிகை'யில் கூடிப் பேசுவதாகச் சொல்லப்படுகின்றது. அக்கூட்டத்திலேயும் இவ்விஷயம் ஆலோசனைக்கு வரலாம். அவர்களது ஆதரவுடன் ஜனப்பிரதிநிதிகள் அனைவரும் அடங்கிய கூட்டத்தைக் கூட்டி, தேசிய முக்கியம் வாய்ந்த பிரச்னைகளைப்பற்றி ஆராய வேண்டும்.

சிறப்பாக மொழி, மலைநாட்டுத்தமிழர், குடியேற்றம், மாகாண சுயாட்சி முதலிய பல முக்கிய தேசிய பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. இவை இதுவரைசெய்யப்பட்ட பல அரசியல் தவறுகளால், அதிக சிக்கலாகியுமுள்ளன. இவற்றைத் தீர்ப்பதென்பது சுலபமல்ல. என்றாலும் குறுகிய சுயநல, கட்சி நலன்களைவிட்டு தேசிய நலனைக் கருதி தியாகங்கள் செய்ய முன்வருவதானால் இப்பிரச்னையை சுமுகமாக தீர்ப்பது முடியாததல்ல. மேலும் ஜனநாயகமென்பது பெரும்பான்மை நாயகமன்று. நாட்டிலுள்ள ஒருவரது நல உரிமையையும் பறிக்க முடியாது, சர்வதேச மனித தர்மத்துக்கமையவும், சர்வதேச தொழிற்சங்க தீர்மானத்துக்கிணங்கவும் விரிந்த மனப்பான்மையுடனே காரியம் செய்வதாயின் இப்பிரச்னைகள் வெகுசுலபமாகத் தீரக்கூடும்.

இவ்வித பிரச்னைகள் இலங்கைக்கு மட்டும் விசேஷமாக ஏற்பட்டதல்ல. இந்தியா முதலிய பல நாடுகளுக்கும் இதே விதமான பிரச்னைகளுண்டு. மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் நம் இலங்கையின் பிரச்னைகள் மிகவும் சுலபமானவை. மற்ற நாடுகள் மொழி, முதலிய பிரச்னைகளை எவ்விதம் தீர்த்துள்ளவென்பதைப் பார்த்து அவற்றை வெகுவாகப் பயன்படுத்தலாம். எப்படியும் ஜனநாயகமென்பது, மெஜாரிட்டி வகுப்பினரால், மெஜாரிட்டி வகுப்பின் நன்மைக்காக மெஜாரிட்டியினர் நடத்தும் ஆட்சி என்ற எண்ணத்தை விட்டு தங்கள் கருத்துக்களை மற்றவர்மீது கட்டாயமாகத் திணிக்காமல், நாட்டில் வசிக்கும் எல்லாருக்கும் சமஉரிமை உண்டென்றும், நாட்டிலே ஆகக் கடையவனையும் மதிக்கும்படியும் ஆட்சி இருக்க வேண்டும். இத்தகைய விரிந்த மனப்பான்மையை அடிப்படையாகக் கொண்டால், தேசிய ஒற்றுமை ஏற்படுவதுடன் நம் நாடு வெகு சீக்கிரத்தில் முன்னேற்றமடையவும் செய்யுமென்பது உறுதி. அவ்வித முக்கியமான மனமாற்றமே இன்று சிறப்பாக ஆட்சிபீடத்திலுள்ளவர்களுக்குத் தேவையாகும்.

இன்றுதேர்திருவிழா நடைபெறும்

# வில்லூன்றி விநாயகர் ஆலயம்

—ஆசிரியர் க. சிற்றம்பலம்—

வில்லூன்றி விநாயகரது ஆலயம் பழம்பெருமை வாய்ந்தது. யாழ்ப்பாணத்திலே வில்லூன்றி என்றால் புண்ணியஸ்தலம் எனவும் கருத இடமுண்டு. தீர்த்தம், தலம், மூர்த்தி என்ற முப்பொருளும் ஒருங்கே அமைந்த இடம் என்றாலும் பொருத்தமுடையதேயாகும்.

எப்பொழுதும் கடலுக்கு அருகாமையில் அமைந்து விளங்கும் ஆலயம், அமைதியும், அழகும் கொண்டு மக்களுள்ளங்களிலும் அமைதியையும், அருள் அலையும் வீசச்செய்யும் பண்பு உள்ளதாகும். வில்லூன்றி வீரகத்தி விநாயகரது ஆலயமும் இந்தப் பண்புகள் பொருந்திய, நலம் நிறை ஆலயமாகும்.

### கர்ணபரம்பரைக் கதை

இராமபிரான் இராவண சம்மாரத்தின்போது இலங்கையை அடைந்து தனது சைனியங்களைச் செலுத்திக் கொண்டு வரும்போது இலங்கையின் உத்தரப் (வடபகுதி) பகுதியில் தங்கநேரிட்டதாகவும் அங்கு இருக்கும்பொழுது சைனியங்களுக்குத் தாகமேற்பட்டதாகவும அவர் தனது கோதண்டத்தயல் நிலத்தில் ஊன்றியதும், அதிலிருந்து ஒரு ஊற்று பிரபாவித்துப் பெருக்கெடுத்ததாகவும், அந்த ஊற்றிலிருந்து சைனியங்கள் தாகசாந்தி செய்துகொண்டதாகவும், அன்று தொடங்கி இதற்கு 'வில்லூன்றி' எனப் பெயர் பெற்றதாகவும், இதற்கு நாமமாக பூர்வதனுக்கோடி என வழங்கியதாகவும் கூறக் காரணமாகின்றது.

### கதையும் சரித்திரமும்

இந்தக் கர்ணபரம்பரைக் கதைக்கும், சரித்திரத்துக்கும் தொடர்பு இருப்பதாக நாம் ஊகிக்க இடமுண்டு. காரணம் புவியியல் ஆராய்ச்சிக்காரர்களில் சிலர் யாழ்ப்பாணக் குடாநாடு, ஒருகாலத்தில் மேற்கேயுள்ள இந்திய நிலப்பரப்புடன் இணைந்துள்ளதெனக் காரணம் காட்டுவதாலும் தனுஷ்கோடி என்ற இடம் இந்தியாவில் இருப்பதாலும் இத்தொடர்பு இதற்குப் பொருத்தமானதாகவும் காணலாம்.

இந்த வில்லூன்றித் தீர்த்தத்துககருகாமையில் அக்காலத்தில் பழமை பொருந்திய சிவாலயம் இருந்தது என்பதற்குப் போதிய ஆதாரங்கள் உண்டு. கேணியைத தோண்டியபோது, பழைய அத்திவாரங்களும், அதற்குரிய சில அத்தாட்சிகளும் காணக்கூடியதாக இருந்தன.

### விநாயகர் கோயிலின் தோற்றம்

வில்லூன்றிக் கேணிக்கருகாமையில இருந்த சிவன்கோயிலுக்கு, அதன் நித்திய நைவேதனங்களுக்காக நிலங்களும் விடப்பட்டிருந்தன என்பதற்கு ஆதாரமாக ஆனைக்கோட்டைப் பகுதியிலுள்ள சில இடங்களின் பெயர்களில் 'தனுக்கோடித் தோட்டம்' என வழங்குவதைக் காணலாம். இவை தற்பொழுது முடிக்குரிய காணிகளாக இருக்கின்றன. பெரும் சிறப்புடன் விளங்கிய சிவாலயமும், தீர்த்தமும் ஒல்லாந்தர் காலத்தில் மகத்துவம் குன்றுவதானது.

### ஒல்லாந்தர் காலம்

வியாபார நோக்கத்துடனும் தங்கள் மதத்தைப் பரப்பும் எண்ணத்துடனும் வந்த ஒல்லாந்தர், கோயில்களை இடித்தும் சைவசமயத்துக்குத் துன்பம் செய்தும், மக்களை மதம் மாற்றி வரும்பொழுது, வில்லூன்றிச் சிவாலயமும் அவர்களின் 'இடி' தொழிலுக்கு இலக்கானது. அதை இடித்த, அதன் கற்களைக்கொண்டு கோட்டைகளும், மதில்களும் கட்டத் தலைப்பட்டனர். இத்துடன் வில்லூன்றிச் சிவாலயத்தின் பண்டை மகத்துவமும் இடிபட்டுப் பலனற்று, மக்களுள்ளங்களை விட்டு விலகியது.

பின்னர் ஆங்கில அரசுக் காலத்தில் அந்தப் புராதன பழைய பண்பமைந்த இடத்தில் திருவருள் கூட்ட அரசர் என்னும் சைவப்பெரியாரின் முயற்சியால் தற்பொழுது எங்களுள்ளங்கவர் வில்லூன்றி ஆலயம் சிறிதாக எழுப்பப்பட்டது. இது தற்பொழுதுள்ள வில்லூன்றித் தீர்த்த ஸ்தலத்துக்கு கீழ்த்திசையில் அமைவதாயிற்று. பின்னர் 1892-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 24-ந் திகதி ஸ்ரீமான் சி. மாரிமுத்து என்பவராலும், வைரமுத்துருஷ்ணர் என்பவராலும் சீர்திருத்தப்பட்டு 1893-ம் ஆண்டு விகாரி வருஷம் தை மாதம் மிருகசீரிட நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு, பின்னர் 1913-ம் ஆண்டு ஆனி மாதம் 27-ந் திகதி மாரிமுத்து வெற்றிவேலு என்பவரால் இருகாலப்பூசைகளும் ஒழுங்காக நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டன. இவற்றில் ஒன்று நாட்டுக் கோட்டை நகரத்தவர்களாலும் நடத்தப்பட்டுவந்தது. பின்னர் 1916-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27-ந் திகதி கிருஷ்ணர் வைரமுத்து என்பவரால் பொறுப்பேற்கப்பட்டு மூன்றுகாலப் பூசையும் ஒழுங்காக நடத்தப்பட்டன.

1942-ம் ஆண்டு தற்பொழுது இருக்கும் ஆலயபரிபாலகர் திரு. சோ. இராசரத்தினம் அவர்களால் பொறுப்பேற்கப்பட்டு அதன்பின்னர் பல சீர்திருத்தங்களுக்கு இடமாகி 1956-ல் மூலஸ்தானப் புனருத்தாரண வேலைகள் அமைக்கப்பட்டு 1959-ல் கும்பாபிஷேகமும் நடத்தப்பட்டது.

பின்னர் 1959லேயே தேர்த் திருப்பணி வேலைகள் செய்யப்பட்டு, கொடிஸ்தம்பம், யாக மண்டபம் அமைக்கப்பட்டு முதல் முதலாக 28-5-59-ல் விகாரி வருஷம் வைகாசி மாதம் 14-ந் திகதி கொடியேற்றி 22-ந் திகதி புதிய தேரில் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் வீதியுலாப் பவனி வர ஆரம்பமாயது. இதன் பின்னர் கோயில் வளர்ச்சி மேன்மேலும் பெருகிவருவதாக அமைந்துள்ளது.

இவ்வாலயத்தில் சைவப் பெருந்தகை எம். எஸ். திருவிளங்கம் என்பவரால் 1950-ம் ஆண்டு தொடக்கம் கூட்டுப் பிரார்த்தனை ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை நடந்துவருவது பெரியாரின் ஆரம்ப முயற்சியின் பலன் என்று தான் கூற வேண்டும். தற்பொழுது ஆறு காலப்பூசைகளுடன், சைவப் பெரியார்களால் திருவிழாக்களும், விசேஷதின விழாக்களும் நடத்தப்பட்டு சைவம் வளர்ந்து தழைத்தோங்கும் தலமாக விளங்குகின்றது.

### வில்லூன்றித் தீர்த்தம்

நல்ல தீர்த்தமாகவும், பாவம் தீர்க்கும் புண்ணிய புனித ஸ்தலமாக வில்லூன்றித் தீர்த்தம் அமைந்துள்ளது. பண்டைப் பெருமையும், தல மகிமையும் உடைய இந்தத் தீர்த்தத் தலத்தைப் புதுமை பெறச் செய்து இந்துக்களின் புனித தீர்த்தத் தலமாக இதனைப் பாவித்துப் பலன்பெற வேண்டியது ஒவ்வொரு இந்துக்களின் கடமையாகும்.

யாழ்ப்பாணத்தவர்களை அல்லாமல, இலங்கையில் எங்குள்ளவர்களென்றாலும் ஒருநாள் இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால் அவர்களைத் தன் வசம் இழுக்கும் தன்மையில் இந்த இடம் அமைந்துள்ளது. ஆடி அமாவாசை, ஆனி உத்திரம் முதலிய விசேஷ தினங்களில அடியார்கள் சென்று தீர்த்தமாடிப் பலன்பெறுகின்றார்கள். பண்டைப் பெருமையுடன் இத்தலம் விளங்கவேண்டுமானால் இந்துக்கள் உள்ளங்களில் இதன் சீர்திருத்த வேலைகள் பற்றிய எண்ணம் உண்டாகி அது மலரவேண்டும். இலங்கையிலேயே மிகவும் உன்னதமான தீர்த்தத் தலமாக இது விளங்குமென்பதற்கு ஒரு தடையுமில்லை. கீரிமலை போன்று இயற்கை அமைவுடன் விளங்கும் தலமாக வில்லூன்றி விளங்குகின்றது. கடலுள் இந்த நன்னீர் ஊற்று கலப்பதையும், நேரத்துக்கு நேரம் நல்ல நீர் ஊற்றுக்கள் தோன்றுவதையும் பலரும் அறிவர்.

## தொழிற் சங்கங்களுக்கு பொறுப்புணர்ச்சி தேவை

கொழும்பு, செவ்வாய்

சுகாதாரசேவை சிறப்புறுவதற்கு சுகாதார இலாகாவைச் சேர்ந்த நிர்வாக உத்தியோகஸ்தர்கள் எவ்வளவு பொறுப்புணர்ச்சியுடன் கடமைபுரிய வேண்டுமோ அதே பொறுப்புணர்ச்சி தொழிலாளர்களின் சங்கங்களாகிய தொழிற் சங்கங்களுக்கும் இருக்கவேண்டுமென சுகாதார அமைச்சர் தொழிற்சங்கக் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

## ஐயாறன் எழுதுவது

கழுதைகள்தான் காகிதம் சாப்பிடுவது வழக்கம். ஆனால் நம் யாழ்ப்பாணத்திலே தெருவிலே சுற்றும் விடுகாலி மாடுகளும் கன்றுகளும், குப்பைத் தொட்டிகளைக் கிண்டி அழுக்குக் காகிதங்களைத் தின்னும் கண்றாவிக் காட்சியைப் பார்த்தேன். பாவம்!

புல்வெளி இருப்பின் மாடுகள் வயிரூற புல் மேயும். தமிழ் மன்னர் ஆட்சி நடந்த காலத்திலே, ஒவ்வொரு கிராமத்திலும் கால்நடை மேய்ச்சலுக்காக பொதுவான புல்வெளிகள் ஒதுக்கப்பட்டு இருக்கும். மனிதருக்கு மட்டுமன்றி மாடுகளுக்கும்கூட உணவுக்கு ஒழுங்கு செய்திருப்பர். ஆனால் இப்போது மனிதருக்கே உணவு உற்பத்திக்கான நிலமில்லை என்றும், ஆகவே மாடுகளுக்கு மேய்ச்சல் நிலம் ஒதுக்குவதற்கில்லை என்றும் சிலர் கூறக்கூடும். பிடிபிடியாக சின்னப்புல் கட்டுகளை சிலர் விலைக்கு விற்கிறார்கள். இந்தப் புல்கிடைக்கும் அதிர்ஷ்டம் எவ்வளவு மாடுகளுக்குக் கிடைக்கும்!

தெனாலிராமன் குதிரை வளர்த்த கதை உங்களுக்குத் தெரியும். அரசன் பலருக்கும் குதிரைகளைக் கொடுத்து, அதன் போஷணைக்காக பணமும் கொடுத்து வளர்க்கச் சொல்லியிருந்தாராம். தெனாலிராமனுக்கும் ஒரு அழகான குதிரைக்குட்டியும் அதன் வளர்ப்புக்குப் பணமும் கிடைத்தது. நான்கு சுவர்களை எழுப்பி அதற்குள் குதிரையைவைத்து, அதிலுள்ள ஒரு சாளரம் வழியாக குதிரைக்குச் சிறிது புல் போடுவது வழக்கமாம். சில மாதங்கள் கழிந்தபின் அரசன் எல்லாக்குதிரைகளையும் கொண்டுவரச் சொன்னான். ராமனைத்தவிர மற்றெல்லாரும் குதிரைகளைக்கொண்டு சென்று மன்னருக்குக்காட்டினர். ஆனால் தன் குதிரை மிகவும் பொல்லாததென்றும் அதைக் கொண்டுவர யாராலும் முடியாதென்றும், தெனாலிராமன்கூறி மன்னரையே நேரில்வந்து பார்க்கச் சொன்னான். மன்னருக்கு நீண்ட தாடியுண்டு. அந்தச் சாளரத்தைக்காட்டி அதன்வழியாக குதிரையைப் பார்க்கச் சொன்னான். ஏமாந்த மன்னர் சாளரத்தின் வழியே தலைநீட்டியதும், புல்தான் வருகிறதென்று நினைத்து. உள்ளிருந்த குதிரை, மன்னரின் தாடியைப் பிடித்து இழுத்தது. பாவம் பாதி தாடியை இழந்து, மன்னர் ஒருவிதமாகத் தப்பி, குதிரை மிகவும் பொல்லாதது தான் என்று முடிவு செய்தாராம். பின்னர் அந்தச்சுவரை இடித்து, அதை பிடிக்க ஏற்பாடுசெய்தபோது, அது எலும்பும் தோலுமாக நிற்கவும் முடியாமல் இருந்ததாகக் கதை. இங்கு மாடுகள் காகிதம் தின்பதைப் பார்க்கையில் இக்கதைதான் நினைப்பு வருகிறது.

முற்காலத்தில் பசுக்களுக்காக தனிமடங்கள் கட்டி, வளர்ப்பதால் பால் தாராளமாகக்கிடைக்கும். ஆனால் இப்போது, பசுக்களையெல்லாம், கசாப்புக்கடைக்கு அனுப்பிவிட்டு, வெளிநாடுகளிலிருந்து, பால்மாவுக்காக ஏங்குகிறோம். செல்வம் வெளியேறுவதுடன் இங்கு போதிய பாலின்றி, குழந்தைகளின் சுகாதாரமும் கெடுகிறது. இந்தக் கண்றாவி நிலைமாறி முன்போல் கால்நடைகளுக்கும் பொதுவான மேய்ச்சல்தரைகள் ஏற்படுமா? அரசாங்கமும் மாநகரசபையும், தர்மசிந்தையுள்ள செல்வந்தர்களும் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தினால் புண்ணிய

(5-ம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழக

# வைத்திய விவசாய புகுமுக பரீட்சை முடிபு

கொழும்பு, செவ்வாய்
1962-ம் வருடம் டிசம்பரில் இடம்பெற்ற வைத்திய புகுமுக பரீட்சையில் சித்திபெற்றவர்கள் விபரம் வருமாறு:

கொழும்பு இந்துக்கல்லூரி, இரத்மலானை: வி. கே. ஜே. பிரான்ஸிஸ், டி. மகேந்திரா.

குட்செப்பேர்ட் கான்வென்ட், கொழும்பு 13: செல்வி ஸி. எம். எஸ். என். அந்தோனி, செல்வி எல். அப்பையா, செல்வி டி. எல். அருணசலம், செல்வி. டி. குமாரகுலசிங்கம், செல்வி. பி. மோடி.

ஸி. எம். எஸ். மகளிர்கல்லூரி, கொழும்பு 7: செல்வி ஸி. முத்துக்குமாரசாமி, செல்வி எஸ். நடராசர்.

மெதடிஸ்ட் கல்லூரி, கொழுபு 3: செல்வி இ. டி. பப்டிஸட், செல்வி வி. வை. ஏப்ரகாம், செல்வி ஐ. எஸ். அங்கடல், செல்வி எஸ. அரசரத்தினம், செல்வி ஸி. டி. தேவ ஸ்ரீ நாராயண. செல்வி எம். ஐ. எஸ் டி. ஜெயத்திலகா, செல்வி ஜி. சின்னத்தம்பி.

பெம்புருக் அகாடமி, கொழும்பு 7: டி. பாலசுந்தரம், கே. ஏ. டி. எஸ். பி. சந்திரசேகரா, செல்வி என். எஸ். டி' சில்வா, கே. எஸ். பி. டி' சில்வா, ஆர். பி ஐ தனபாலா, டி. ஏ. ஜே. தர்மரத்ன, வி. துல்தேனியா, எம். என். இமானுவேல், கே. என். ஆர். பி. குணவர்தன, பி. எச். குணதிலகா, என். எள். ஹினதிகாலா, எம். டபிள்யு ஜி. டபிள்யு. ஜெயதிலகா, எச பி. குல்சிங்கா, பி. கதிர்காமநாதன், எஸ. கருணாநகம், ஆர். எல். குருகுலசூரியா, கே. நாகராஜா, வி. ந. குலேந்திரன், செல்வி ஜி. பி பரணவீவா, எஸ். எம். பெரோரா, டி. டபிள்யு. பத்மதேவா, எம். பி. ரணதுங்கா, டி. ராசரத்தினம், எம். சச்சிதானந்தம், என். எஸ். சமரக்கொடி, பி. சிவராஜா, எல். எம். பி செனிவரத்ன, பி. ஜே. ஜெயரத்ன, எம், ஆர். விக்ரமசிங்கா, எச். எஸ். டி' எஸ். விஜயவிக்ரமா, டி. வி. எ. டபிள்யு. விக்ரமசூரியா, வை. விஜயநாயகம்.

பிறின்சஸ் ஆப்வேல்ஸ் கல்லூரி, மொரட்டுவா: செல்வி எஸ். என். பெர்னண்டோ, செல்வி டி. செல்லத்துரை.

ரோயல்கல்லூரி, கொழும்பு 7: எஸ். டி. அருட்பிரகாசம, எஸ். எம். திஸநாயகா, ஸி. ஆர். குணதிலகா, ஐ. டி. ஹேதுமணி, என். எம். ஜெயதுங்கா, ஏ. கருணநாயகா, எம். ஆர். மௌஜூட், ஏ. நிமலசூரியா, எஸ். பரமேஸ்வரன், ஸி. கே. பத்திரண, ஸி. என். ஏ. ராஜபக்ஷ, எஸ். கே. ஆர். என். சபாரத்தினம், கே ஏ சிறிபாலா, எல் ஏ டபிள்யு சிறிசேன, வி சுரேந்திரா, சிவசுப்பிரமணியம் தியாகாராஜா, சோமசுந்தரம் தியாகராஜா, வி துரைசிங்கம், என் டி வர்ணசூரியா, ஜி கே வருசவிதாரண, எஸ டி விக்ரமசிங்கா, எஸ் ஏ விஜயசேகரா.

சென். பெனடிக்ற் கல்லூரி, கொழும்பு 13: ஈ என் ஆர் பொன்சேக்கா, எஸ் கண்ணப்பன், ஸி ஸி பெரேரா, கே ஏ ஜி பெரேரா.

சென். ஜோசப் கல்லூரி, கொழும்பு: ஜே ஜி ஏ மரியதாசன்.

சென். பீட்டர்ஸ் கல்லூரி கொழும்பு 4: டி ஜி பெர்னண்டோ, எப் பி ஈ குணரத்ன, ஸி ஆர் சேரசிங்கா, என் வாமதேவன், எஸ எஸ வீரசேன

சென். தோமஸ் கல்லூரி, கல்கிசை: எஸ எஸ் அரியரத்தினம், ஜி என் ஏ ஹேவவாசன, எப் எல் ஜெயக்கொடி, எம் என டி பி ஜெயதிலகா, பி என் எம் ஜெயவர்தன, ஆர் யு லியனகே, டபிள்யு ஏ கே ராஜசிங்கவ, டி எல் எச் ஜே பி ஆர் சேனநாயகா, ஸி என் சித்தரஆராச்சி, ஏ எல் தேனபடு, ஆர் ஆர் வாட்சன், பி ஸி விக்ரமசிங்கா.

சாகிராக்கல்லூரி, கொழும்பு 10: ஏ எச் எம் அப்துல்காதர், எம் என் எம் அசாத், எம் எச் ஆர் டீன், எ ஆர் முகமது அஸீஸ், எம் எச் முகமது மஸ்நாவி.

கொழும்பு - தனியார்: எச். அபயசுந்தரா, டி. ஜி. ஏ. அபயகுணரத்ன, பி. பொடிநாயகா, எம். தர்மராஜா, கே. ஆர். டி. சில்வா, ஆர். எம். யு. டி' சொய்ஸா, ஏ. வி. ஈ. பெர்னண்டோ, டபிள்யு. எல். ஜி. ஸி. பெர்னண்டோ, எஸ். ஜெகதீஸன், என். ஜெயலிங்கம், எஸ். ஜெயசீலன், ஜே. கதிர்காமத்தம்பி, கே. சந்தசாமிப்பிள்ளை, செல்வி ஜே. கதிர்காமத்தம்பி, எஸ். கிருபாலசுந்தரம், ஸி. கிருஷ்ணதாஸன், பி. எஸ். குமாரலிங்கம், ஸி. மகேந்திரன், எஸ். மரியநாயகம், செல்வி ஆர். எஸ். மாதேசிங்கா, பி. ஸி. டபிள்யு. மெண்டிஸ், ஆர். ஆர் எக்ஸ். மைல்வாகனம், டி. பரமநாதன், எம். எல். கியூபீரிஸ், ஜி. ஆர். எம். பி பெரேரா, ஏ. எம். ராஜபக்ஷா, கியூ. ரத்னயகா வி. ஸ்ரீ. ராஜேஸ்வரன், ஆர். சுந்தரலிங்கம், ஜி. என். பி. வலகம்பாயா, டி எஸ் வணிகதுங்கா.

ட்றினிட்டி கல்லூரி, கண்டி: ஏ. டபிள்யு. ஜெயசிங்க, ஆர். டி கே ரணசிங்கா, எஸ். விஜயரத்தினம்.

சென். அலோஷியஸ் கல்லூரி, காலி: ஆர். ஜே. டபிள்யு. பொலுன, எம். கஹாகச்சி, ஆர் சோமசுந்தரம், டி. எஸ். வணிகரத்ன.

காலி, தனியார்: எம் வேலும்மயிலும்.

சண்டுக்குளி மகளிர்கல்லூரி, யாழ்ப்பாணம்: செல்வி ஆர் சந்திரசேகரம்.

ஹாட்லி கல்லூரி, பருத்தித்துறை: செல்வி ஜி. துரைசிங்கம், எம். கஜபதி, கே. ஈஸ்வரா, ஆர் மகாதேவன்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி: செல்வி எல். பாலசிங்கம், கே. கதிர்காமநாதன், ஸி. கே. கே. செல்வத்துரை, எம். வீரவாகு.

யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை: செல்வி எஸ் கந்தனயினர், செல்வி டி கிருஷ்ணன், எஸ். எஸ். பரணவிதான, ஆர் யோகசேகிரர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி. ஜி ஞானசேகரம், ஆர். ராஜநாயகம், டி சிவானந்தராஜா, வி. சிவசுப்பிரமணியம்.

மகாஜனகல்லூரி, தெல்லிப்பளை: ஜி ஐசாக்வரப்பிரசாதன், செல்வி ஜி. குலசிங்கம், செல்வி கே நடராஜா, கே நடேசலிங்கம், கே சண்முகசுந்தரம், ஏ. சிவபாலசுந்தரம், செல்வி எஸ் விநாசித்தம்பி.

வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம்: டி. திருநாவுக்கரசு.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்: எம். செல்லப்பா, செல்வி ஜி சுந்தரம்பிள்ளை, செல்வி பி தாமோதரம்பிள்ளை.

சென்ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்: செல்வி கே. டி சிற்றம்பலம், எம் ஞானசரத்னம், ஜே ஜி குணசெல்வம், டி ஜெகதீஸன், கே. பத்மநாதன், ஸி. பத்மராஜா, ஸி. பிரேமகுமார், எஸ் செல்வநாயகம், என் சிவானந்தன், எஸ் எம் தம்பிராஜா, டி வைரவிப்பிள்ளை, செல்வத்துரை யோகநாதன்.

சென். பட்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்; ஆர் கனகரத்தினம், ஏ ஜே டி பிள்ளைநாயகம்.

யூனியன்கல்லூரி, தெல்லிப்பளை: டி ஜெயரஞ்சன்.

வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்: செல்வி ஐ ஈ மதியாபரணம், செல்வி ஆர் நவரத்தினராஜா, செல்வி எஸ் ராமையா.

கோட்டைமுனை மகாவித்யாலம், மட்டக்களப்பு: கே பி பாலகிருஷ்ணன், செல்வி டபிள்யு கந்தையா, வி விவேகானந்தராஜா.

யாழ்ப்பாணம் - தனியார்: பி ஆறுமுகராஜா, எஸ் ஜி குணபாலன்.

## பல்வைத்திய பகுதி

கொழும்பு, தனியார்: செல்வி டபிள்யு எம் பி கே பெர்னண்டோ, பி ஆர் ஆர் என் மெண்டிஸ், வி ராஜயோகேஸ்வரன், எஸ சிவஞானசுந்தரம்.

மகளிர் உயர்தர பாடசாலை, கண்டி: செல்வி ஸி ஜே ஜெயராஜ்.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்: செல்வி எஸ சின்னத்துரை, செல்வி எஸ தம்பையா.

ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை: எம். தேவராஜகோன்.

திருக்குடும்ப கன்னியாஸதிரி மடப்பாடசாலை (ஹோலிபமிலி கான்வெண்ட்), யாழ்ப்பாணம்: செல்வி எஸ கனகத்தினம்.

இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்: என் நடேசன்.

ஸகந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்: எஸ ஜெகநாதன்.

சென்ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்: கே கிருஷ்ணராசா, எஸ் யோகதேவா.

கோட்டைமுனை மகாவித்தியாலயம், மட்டக்களப்பு: செல்வி ஸி ஈ ஞானசூரியம்.

## மிருக வைத்திய பகுதி

கொழும்பு, தனியார்: ஜி ஞானசம்பந்தன்.

யாழ்ப்பாணம், மத்தியகல்லூரி: எஸ் எஸ் பாலச்சந்திரன்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி: எஸ அகிலாண்டன்.

மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பளை: ஏ சக்திவேல்.

ஸகந்தவரோதயகல்லூரி, சுன்னாகம்: பி கந்தசாமி, செல்வி பி ராசையா.

சென் ஜோன்ஸ கல்லூரி, யாழ்ப்பாணம்: எம் தங்கராஜா.

சென். பற்றிக்ஸ கல்லூரி, யாழ்ப்பாணம்: ஏ வி ஆர் ஜே ஜோசப்.

கோட்டைமுனை மகாவித்தியாலம், மட்டக்களப்பு: டபிள்யு எஸ அருளையா.

யாழ்ப்பாணம், தனியார்: செல்வி பி மாணிக்கம், ஏ நவரத்னராஜா.

## உயிரியல் பகுதி

ஆனந்தாக் கல்லூரி கொழும்பு: எச் பி அமந்தகூன், ஏ எம் ஏ அமராபதி, பி பி தர்மவர்தன, ஜி ஆர் ஜெயதிலகா, டபிள்யு சேனநாயகா.

அக்குவானஸ கல்லூரி, கொழும்பு 8: செல்வி ஸி என் அபயகுணவர்தன, செல்வி ஜி ஈ டயஸ அபயசிங்கா, செல்வி டி ஜே எம் வின்சன்ட், டி ஜே ஏ அபயசேகரா, டி பாக்கியரத்னம், ஆர். சோமநாதன்.

குட்செப்பேர்ட், கொழும்பு13: செல்வி எஸ ஜெருமையா, செல்வி எம் எல் பி எலியாஸ.

ஜி. எம். எஸ மகளிர்கல்லூரி, கொழும்பு 7: செல்வி கே அருமைநாயகம், செல்வி ஏ எச் கன்னங்கரா, செல்வி ஜி ராமச்சந்திரன், செல்வி எஸ செல்வரத்தினம், செல்வி ஓ வி ஜே குணவர்தன.

பெம்புருக் அகாடமி, கொழும்பு 10: செல்வி டி பி ஐ [illegible]யனகே, எம் பி வரகொ[illegible], டபிள்யு எம் எஸ் பி [illegible]வர்ச்கூன், ஐ வி. எஸ் பெர்னண்டோ, செல்வி கே பொன்னையா, எஸ். சொக்கலிங்கம், எச் டி சுப்பிரமணியம், டி விஜயவர்த்தன.

சென். மேரீஸ்கல்லூரி, சிலாபம்: பி ஐ சிவராமகிருஷ்ண சர்மா.

சென்பீட்டர்ஸ் கல்லூரி, கொழும்பு 4: ஜே ஞானமுல்ல, டி ஜே நவரத்தினம்.

கொழும்பு தனியார்: பி எம் அபயரத்னபண்டா, டி ஜே ஜெயதிலகா, டி கனகசபை, ஜி ஏ வீரக்கூன், செல்வி வியு விக்னராஜா, டி ஸி தியாகராசா, ஜி ஏ டி எஸ் விக்ரமரத்ன, டி எஸ் கே விக்ரமதுங்கா.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்: செல்வி. எஸ ராஜரத்தினம்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி: எஸ் பாலச்சந்திரன், ஆர் கே ஜெயராஜா, டி தேவகாந்தன், பி சிவநாதன்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி: எஸ். சுந்தரேஸன்.

யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோடடை: செல்வி ஜி சிவசம்பு.

யாழ்ப்பாணம் இந்து மகளிர்கல்லூரி: செல்விஎஸ் வைத்தியலிங்கம், செல்வி எம் செல்வத்துரை.

மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பளை: செல்வ கே சுப்பிரமணியம், எஸ் வரப்பிரகாசம், செல்வி ஜி சுப்பிரமணியம்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்: என் தேவநேசன், எஸ சண்முகசுந்தரம், செல்வ் ஏ பி செல்வரத்தினம்.

சென்பட்றிக்ஸ கல்லூரி, யாழ்ப்பாணம்: வி ஆர் பி ஜெகநேந்திரம்.

வேம்படி மகளிர்கல்லூரி, யாழ்ப்பாணம்: செல்வி டி தம்பிப்பிளளை, செல்வி வை மயில்வாகனம்பிள்ளை.

## விவசாயப்பகுதியில் சித்தியடைந்தவர்கள்

சென், பெனடிக்ட் கல்லூரி, கொழும்பு 13: கே ஞானசரத்னம்.

ஸகிராக்கல்லூரி கொழும்பு 10: பி எச் சோமசுந்தரம்.

ஹாட்லிக் கல்லூரி, பருத்திததுறை: ஏ கந்தையா.

யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை; ஸி எல் தேவசகாயம்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி: எஸ கிருஷ்ணதாஸ.

மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பளை: வி பவனேசசிவம்.

சென். ஜோன்ஸ கல்லூரி யாழ்ப்பாணம்: பி. தவம்.

# பெரிய கல்லூரிகளுக்கு பல்கலைக்கழக அந்தஸ்து

## கல்வி மந்திரியின் திட்டம்

காலி, செவ்வாய்
பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சையில் திறமையாகச் செய்திருந்தும் பல்கலைக்கழகத்தில் போதிய இடவசதியின்மையால் அங்கு சேர்ந்து பயில முடியாதிருக்கும் மாணவர்களுக்கு சலுகையளிக்குமுகமாக பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் தொடர்புள்ள பெரிய கல்லூரிகளை பல்கலைக்கழக அந்தஸ்துக்கு உயர்த்தி இந்த மாணவர்கள் அங்குபயிலக்கூடிய வசதிசெய்யத்தக்க அறிக்கையொன்றைத் தாம் மந்திரிசபையில் சமர்ப்பித்துள்ளதாக கல்விமந்திரி ஜனாப பதியுதீன் காலி மகிந்தாக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துகொண்ட கூட்டத்தில் கல்விமந்திரி மேலும் தெரிவித்ததாவது:

தகுதிபெற்ற மாணவர்கள் பட்டம்பெறுவதற்கு அனுமதிக்காதிருப்பது அவர்களுக்கு பெரும இடையூறு செய்வதாக இருககும். இதனல்தான் நான் அவர்கள் தமது கல்வியைத் தொடர்ந்து பயில்வதற்கு வழிசெய்ய இவ்விதயோசனையைத் தெரிவித்துள்ளேன்.

இந்தயோசனைக்கு மந்திரிசபை அங்கீகாரம் கிடைததால் மகிந்தாக் கல்லூரியை பல்கலைக்கழக அந்தஸதுக்கு உயர்த்த நான் நடவடிக்கை எடுபேனென உறுதி கூறுகினறேன்.

### யா[illegible]ப்பாணத்தில் பல்கலைக்கழகம்?

கொழும்பில் இரு கல்லூரிகளையும், யாழ்ப்பாணம், கண்டி, காலி ஆகிய இடங்களிலுள்ள மூன்று கல்லூரிகளையும் பல்கலைக்கழகமாகக மந்திரி யோசனை செய்துள்ளதாக அறியப்படுகிறது.

# ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

முண்டு நல்ல பயனுமிருக்கும்.

* * *

நேற்று ஓர் அன்பர் வந்து யாழ்ப்பாண இ. போ. ச. வைப்பற்றி ஒருபுகார் கூறினர். அவர் வீட்டுக்குப் பக்கத்திலே ஒரு பஸ்ஸ்டாண்ட். பஸ வந்துநின்று, அதிலிருந்து ஏழெட்டு மாணவிகள் இறங்கினர். அந்த அன்பருக்கு உடல்நலம் சரியில்லை. ஆஸ்பத்திரிக்குச் செல்ல, பஸ்ஸில் ஏறமுயன்றதும், கண்டக்டர் ஏறக்கூடாதென்றுதடுத்தாராம் தன் நிலையை அவர் விளக்கி, ஏழெட்டுபேர் இறங்கியதில் தான் ஏறக்கூடாதா என்று வாதித்ததாயும், 30 நிமிஷமாக வாதம் நீடித்து, முடிவில் பக்கத்திலுள்ளவர்கள் கூறியதின் மீது அந்த அன்பரை ஏறிச் செல்ல அனுமதித்தாராம் அந்த கண்டக்டர்துரை.

போதிய பஸ் இல்லாததால், பஸ்ஸில் அதிகமானவர்களை ஏற்றிச் செல்லவேண்டிய அவசியமுள்ளது. பலர் இறங்கிய இடத்தில், ஒருவரை ஏறக்கூடாதென்று தடுத்தது பெருந்தவறு. எப்படியும் எஜமானர்களாகிய பொதுமக்களிடம், பஸ் சிப்பந்திகள் அன்பும் மரியாதையும் காட்டவேண்டும். அதிகாரம் பெரும் நஷ்டத்தில் நடக்கும் பஸ் சேவைக்குக் கூடுமானவரை வருமானத்தை அதிகரிக்கவும் அவர் முயலவேண்டியது கடமையாகும். இனி இவ்வித தவறுகள் நடைபெருமல் இங்குள்ள இ. போ. ச. சிப்பந்திகளும், அதிகாரிகளும் பார்த்துக கொள்வார்களா?

* * *

ஆலாலம் உண்டுகந்த ஆதி கண்டாய் அடையவர்தம்புர
மூன்றும் எய்தான் கண்டாய்,
காலாலக் காலனையுங் காய்ந்
தான் கண்டாய் கண்ணப்பர்க்
கருள் செய்த காளை கண்டாய்,
பாலாரும் மொழி மடவாள்
பாகன் கண்டாய், பசுவேறுப்
பலிதிரியும் பண்பன்கண்டாய்,
மாலாலும் அறிவரிய மைந்
தன் கண்டாய் மழபாடி மன்
னும் மணாளன் தானே,

— திருநாவுக்கரசர்.

# வவனியாவில் . . . .

(1-ம் பக்க தொடர்ச்சி)

சென்று பார்வையிட்டனர். வவனியாப் பொலிசார் புலன் விசாரணைசெய்துவருகின்றனர். வவனியா மாஜிஸ்டிரேட் இன்று ஸதலத்தில் மரண விசாரணை நடத்தினர்.

# வெட்டுக் காயத்துடன் மரணம

## சந்தேக நபரைக் கைதுசெய்ய வாரண்ட்

மாவிட்டபுரம், செவ்வாய்
அராலி மேற்கைச் சேர்ந்த முருகேசு வீரசிங்கம் என்பவர் வெட்டுக்காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இன்று அதிகாலை மரணமானர்.

இவரது மரணம் குறித்து ஸ்தலத்திலும் ஆஸ்பத்திரியிலும் மரண விசாரணை நடைபெற்றது. இதுசம்பந்தமாக சங்கானைப் பொலிஸார் வேலுப்பிள்ளை குமாரசாமி என்பவரைத் தேடுகின்றனர். மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. வெள்ளி டி' தாமோதரம் சந்தேகநபரைக் கைதுசெய்ய வாரண்ட் பிறப்பித்துள்ளார்.

# கலை அரங்கம்

## இத்தாலியிலிருந்து பயங்கர மிருகங்கள் வரவழைக்கப்படும்

மனிதன் தோன்றுவதற்கு முன்பாக உலகில் வாழ்ந்த ராட்சத மிருகங்களைப்போல செயற்கையாகச் செய்யப்பட்ட மிருகங்களை பம்பாயைச் சேர்ந்த பிரபல சினிமாப்படத் தயாரிப்பாளரான எப். சி. மேஷ்ரா இத்தாலியிலிருந்து வரவழைக்கிறார்.

ஈஸ்ட்மன் கலரில் மேஹரா தயாரிக்கும் 'ஷிகாரி' என்னும் படத்திற்கு இந்த ராட்சத மிருகங்கள் பயன்படுத்தப்படும். இப்படம் கோளரவில் தயாரிக்கப்படவிருக்கிறது.

சிறிய மிருகங்களைப் பயங்கர உருவம் கொண்ட மிருகங்களாக மாற்றுவதற்கு ஒரு மருந்தைக்கண்டு பிடித்துள்ளார் ஒரு ஆராய்ச்சியாளர். இவரது மருந்தின் காரணமாக சாதாரண மனிதக்குரங்கொன்று 26 அடி உயரமுள்ள பூதாகாரமான மிருகமாக மாறி இருக்கிறது. இதேபோல் அவர் பல பயங்கர மிருகங்களைச் சிருஷ்டித்து விடுகிறார். சர்க்கஸ் கம்பெனி நடத்தும் இருவர் இவற்றில் ஒரு மிருகத்தைவாங்கிப் பழக்கி தங்கள் சர்க்கஸ் காட்சிக்குப் பயன்படுத்தி வருவாலை அதிகரிக்கத்திட்ட மிடுகின்றனர். சர்க்கஸ் கம்பெனி சார்பில் மேற்படி ஆராய்ச்சியாளரைக் காணச் செல்லும் இளம் பெண்மீது அந்த ஆராய்ச்சியாளர் காதல் கொண்டு ராட்சத மிருகங்கள் காவல்காக்கும் குகையில் அவளைச் சிறைப்படுத்துகிறார். இவ்வாறான கதையை அடிப்படையாகக் கொண்டது இப்படம்.

இதில் ராட்சத மிருகங்களிடையே சிக்கித்தவிக்கும் பெண்ணாக, ராகினி நடிக்கிறார்.

மேற்படி கதையில் வரும் குகையைக்காக்கும் ராட்சத மிருகங்களுக்காகவே இத்தாலியிலிருந்து இந்த செயற்கை மிருகங்கள் வரவழைக்கப்படுகின்றன.

பயங்கர உருவம கொண்ட ராட்சத கொரில்லாக் குரங்கொன்று ஆராய்ச்சியாளரால் தூண்டிவிடப்பட்டு பல கிராமங்களுக்குத் தீயிட்டுச் சூறையாடும்காட்சி பயங்கரமானதாக இருக்குமாம். இப்படத்தில் ராகினி, ஹெலன் ஆகியோரின் நடனங்களும் இடம் பெறும்.

## எம். ஜி. ஆரைக் காண முடியவில்லை; இளைஞர் உயிரை மாய்க்க கடலில் குதித்தார்

நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனைப் பார்க்க முடியாததால் இளைஞர் ஒருவர் மனமுடைந்து தற்கொலை செய்துகொள்ள முயன்றதாக அவர்மீது வழக்குத் தாக்கல்செய்யப்பட்டுள்ளது. இச் சம்பவம்பற்றிச் சொல்லப்படுவதாவது:

மதுரை அழகாபுரியைச் சேர்ந்த சக்திவேல் என்பவரே தற்கொலை செய்துகொள்ள முயன்றவராவார். திரைப்படத்திற்குக் கதை வசனம் எழுத ஆசைப்பட்ட அவர் இரண்டு மூன்று கதைகளை எடுத்துக் கொண்டு சென்னைக்கு வந்து நடிகர் எம். ஜி. ஆரைச் சந்திக்க முயன்றார். அவரைப் பார்க்க முடியவில்லையாம். இதனால் சக்திவேல் மனமுடைந்து தற்கொலை செய்துகொள்ள கடலில் குதித்தார்.

## நீங்க நல்லாயிருப்பீர்களா? நடிகை சாவித்திரி கேட்டார்

சாவித்திரியும் குட்டி சாவித்திரியும் தெருவில் ஆடிப் பாடிப் பிழைப்பவர்கள். வழக்கமாக ஒருநாள் கடுமையான வெய்யிலில் ஆடிப் பாடுகிறார்கள். சுற்றிநிற்கும் ஜனங்கள் வேடிக்கை பார்த்து மகிழ்கிறார்கள். சிறுமி சாவித்திரி கூட்டத்தினிடையே தட்டை ஏந்தி யாசிக்கிறாள். யாருமே ஒரு நாயா பைசாகூடப் போடாமல் நழுவுகிறார்கள்.

அந்த ஜனங்களின் கருமித்தனத்தைக் கண்டு கொதித்து எழும் சாவித்திரி "சின்னஞ்சிறு குழந்தை பதைபதைக்கும் வெய்யிலில் ஆடிப் பாடியதைப் பார்த்துவிட்டு சும்மா போகிறீர்களே - நீங்கள் நல்லாயிருப்பீர்களா?" என்று கூறுகிறார்.

இக் காட்சி 'ஆயிரம் ரூபாய்' படத்திற்காகப் படமாக்கப்பட்டது.

—

### "அல்லி" புதிய படம்

எஸ். எஸ். ஆர். பிக்சர்ஸ் சார் "அல்லி" என்ற பெயரில் புதுப்படமொன்றினைத் தயாரிக்கத் தொடங்கியுள்ளனர். இதில் ராஜேந்திரனும் விஜயகுமாரியும் ஜோடியாக நடிக்கின்றனர். இதைத்தவிர எஸ். எஸ். ராசேந்திரனின் பிக்சர்ஸ் புதிய சமூகப்படமொன்றினையும் தயாரித்து வருகின்றனர். இதில் எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, ரங்கராவ், ராதா ஆகியோர் நடிக்கின்றனர்.

### கதாநாயகனாக மகாலிங்கம்

'நாகமலை அழகி' படத்தைத் தயாரித்துத் திரையிட்ட மாதேஸ்வரி பிலிம்சார் ஒரு முழு நீள ஹாஸ்யப்படத்தைத் தயாரிக்கவிருக்கின்றனர். கோபிநாத் டைரக்ஷனில் தயாரிக்கப்படவிருக்கும் இப்படத்தின் வசனத்தை மாறன் எழுதுகிறார். டி. ஆர். மகாலிங்கம் கதாநாயகனாக நடிப்பார் என்று தெரிகிறது.

—

### கே. ஆர். ராமசாமியின் சொந்தப் படம்

நடிகர் கே. ஆர். ராமசாமி சொந்தமமகத் தயாரிக்கப் போகும் படத்திற்கான கதை வசனத்தை சி. என். அண்ணாத்துரை எழுதிக் கொடுத்துள்ளார். ராஜேந்திரன், விஜயகுமாரி, ரங்கராவ் முக்கிய பாகங்களில் நடிக்கவிருக்கும் இப்படத்தை ஏ. எஸ். ஏ சாமி டைரக்ட் செய்வார்.

—

### பாக்கியலக்ஷ்மி புரொடக்ஷன்ஸ்

இசையமைப்பாளர்களில் ஒருவரான விஸ்வநாதனும், ஆர்ட் டைரக்டர் கங்காவும் கூட்டாகச் சேர்ந்து ஒரு பட நிறுவனத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். இப்பட நிறுவனத்தின் பெயர் பாக்கியலக்ஷ்மி புரொடக்ஷன்ஸ் என்பதாகும். இப்பட நிறுவனத்தின் முதற் படத்தை ஸ்ரீதர் டைரக்ட் செய்கிறார்.



## சினிமாவிலிருந்து சிவாஜி விலகுவார்?

சிவாஜி கணேசன் சினிமாவிலிருந்து விலகித் தொழிலதிபராக மாறப்போவதாகத் தெரிகிறது. சிவாஜி கணேசன் முன்னர் தீர்மானித்தபடி நூல் மில் ஒன்றினை அமைக்க முயற்சிகள் மேற்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

தற்போது நடித்து வரும் படங்களை முடித்துவிட்டுச் சினிமா உலகிலிருந்து விலக சிவாஜி தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. அதற்குப் பின் அவர் நாடகங்களில் அதிக கவனம் செலுத்துவதுடன் சொந்தப் படங்கள் தயாரிப்பதிலும் ஈடுபடப்போவதாகத் தெரிகிறது.

—

## நெஞ்சில் ஓர் ஆலயத்திற்கு ராதாகிருஷ்ணன் பாராட்டு

'நெஞ்சில் ஓர் ஆலயம்' படப் பெயரைக் கேட்டு இந்திய ஜனாதிபதி திரு. ராதா கிருஷ்ணன் பாராட்டுத்தெரிவித்துள்ளார். நெஞ்சில் ஓர் ஆலயம்' பற்றி ராதா கிருஷ்ணன் குறிப்பிடுகையில் 'மனிதனின் இதயத்தில் எப்போதும் ஆண்டவன் குடி கொண்டிருக்கிறான். எனவே ஆண்டவன் குடி கொண்டிருக்கும் இதயத்தை ஆலயம் என்று கூறுவது மிகப் பொருத்தமாகும். இந்தப்பெயர் அர்த்தபுஷ்டி நிறைந்த ஒரு நல்ல பெயராகும்' என்று அவர் கூறினர்.

—

### பிரசாத்தின் ஹிந்திப்படம்

பிரசாத்புரொடக்ஷன் சாரின் அடுத்த ஹிந்திப்படத்திற்காக சமீபத்தில் மூன்று பாடல்கள் பம்பாயில் பதிவு செய்யப்பட்டுள்ளன. முகமது ரபி பாடிய இரண்டு பாடல்களுக்கும் லதா மங்கேஷ்கர் பாடிய ஒரு பாடலுக்கும் சங்கர் ஜெய்கிஷன் இசையமைத்திருக்கிறார்கள். தெலுங்கில் வந்த படத்தின் கதையைத் தழுவித் தயாரிக்கப்படும் இப்படத்தில் சுனில்தத்தும், சரோஜாதேவியும் பிரதம பாகத்தில் நடிக்கவிருககிறார்கள். மற்றும் ஜமுனா, சுபா கோட்டே, மகமூத் ஆகியோரும் நடிப்பர்.

—

### பார் மகளே பார்

கஸ்தூர் பிலிம்சார் "பெற்றால் தான் பிள்ளையா?" என்ற நாடகத்தைத் தழுவிப் படமாக்கிவரும் படத்திற்கு 'பார் மகளே பார்" என்ற பெயர் வைத்திருக்கிறார்கள். பீம்சிங் டைரட் செய்யும் இப்படத்தில் சிவாஜி கனேசன் முத்துராமன், ரங்கராவ் விஜயகுமாரி ஆகியோர் நடித்துவருகிறார்கள்.

—

### ஹிந்திப் படம் கே. சுப்பிரமணியம் தயாரிக்கிறார்

டைரக்டர் கே. கே. சுப்பிரமணியத்தின் மொராக் பிலிம்ஸ் ஒரு ஹிந்திப் படத்தைத் தயாரிக்கப்போகிறது. பிரபல நட்சத்திரங்கள் நடிக்கப் போகும் இப்படத்தை ரிஷிகேஷ் முகார்ஜி டைரக்ட் செய்வார். சலீல் சவுத்திரி சங்கீதம் அமைப்பார்.

## கிருபளானியை எதிர்த்து நடிகர்கள் பிரசாரம்!

உத்திரபிரதேசத்தைச் சேர்ந்த அம்ரோசா தொகுதியில் டில்லி சட்டசபைக்காக நடைபெறும் உபதேர்தலில் காங்கிரஸ்கட்சி சார்பில் மத்திய நீர்ப்பாசன மந்திரி இப்ரஹீம் போட்டியிடுகிறார் இவரை எதிர்த்து பொதுத் தேர்தலின்போது பம்பாயில் திரு. கிருஷ்ணமேனனை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோல்வியடைந்த திரு. ஆச்சாரிய கிருபளானி போட்டி போடுகிறார். இவரை சுதந்திரக்கட்சி, பிரஜாசோஷலிஸ்ட்கட்சி, ஜனசங்கம் ஆகியன ஆதரிக்கின்றன.

பம்பாய் சினிமா நட்சத்திரங்கள் முன்பு கிருபளானியை எதிர்த்து கிருஷ்ணமேனனுக்கு ஆதரவாகப் பம்பாயில் பிரசாரம் செய்ததைப் போல அம்ரோசா தொகுதியிலும் கிருபளானியை எதிர்த்துப் பிரசாரம்செய்யவிருக்கிறார்கள். இப்பிரசாரத்தில் திலிப்குமார், ராஜ்கபூர், தேவ்ஆனந்த், சுனில்தத், பால ராஜ், சஹானி, நர்க்கிஸ், மாலாசின்கா, மீனுகுமாரி ஆகிய நட்சத்திரங்களும் பின்னனிப்பாடகர்களும் இசையமைப்பார்களும் செல்லவிருக்கிறார்கள்.

## தணிக்கை விதிகளில் திருத்தம் இந்திய அரசாங்கம் கொண்டு வருகிறது

புதுடில்லி, மே 21

சினிமாப்படத் தணிக்கை சம்பந்தமான மத்திய போர்டு மெம்பர்களுக்கும் பொது மக்கள் பார்வையிடுவதற்காக அந்த போர்டு சினிமாப் படங்களும் அங்கீகாரமளிப்பதற்குமிடையே நெருங்கிய தொடர்பு இருக்கும்பொருட்டு சினிமாப் படத் தணிக்கை விதிகளுக்கு இந்திய அரசாங்கம் ஒரு முக்கிய திருத்தம்கொண்டுவந்துள்ளது. இத் திருத்தத்தின் மூலம் போர்டு தலைவர் ஒரு மறு பரிசீலனைக் கமிட்டியை மாத்திரம் தெரிவு செய்யலாம். அவர் ஒரு பரிசீலனைக் கமிட்டியையும் விசேஷ பரிசீலனைக் கமிட்டியையும் அமைக்க முடியாது.

மறு பரிசீலனைக் கமிட்டியில் தலைவருடன் 9 பேர் இருப்பர். மறு பரிசீலனைக் கமிட்டி அமைப்பு விஷயத்தில் தலைவருக்கு அதிகாரமும் சுதந்திரமும் வழங்கப்பட்டுள்ளது,

திரைப்படச் சட்டப்படி சினிமாப்படங்களை மக்களுக்குக் காட்டுவதற்கு அங்கீகாரம் அளிப்பதற்காக சினிமாப் பட மத்திய தணிக்கை போர்ட் இருக்கிறது. ஆனால் நடைமுறைப் போர்டின் தலைவர் ஒருவரே மக்கள் பார்ப்பதற்கு அனுமதிக்க வேண்டிய படங்களைச் சோதிக்கிறார். மக்களுக்குக் காட்டப்பட வேண்டிய சினிமாப்படங்களைப் போர்டு மெம்பர்கள் சோதிப்பதற்கு இப்போதுள்ள வசதிகளின்படி ஏற்பாடில்லை. ஆகவே தலைவருடன் அங்கத்தவர்களும் சினிமாப்படங்களைச் சோதிப்பதற்கு வழிசெய்வதற்காகவே விதிகள் திருத்தப்படுகின்றன.

—

### 'சுசிலா'வில் புதுமுகங்கள்

ஸ்ரீவிநயக சித்ரா ஸ்தாபனம் தயாரிக்கும் ஹிந்திப்படத்தில் முற்றிலும் புது முகங்களே நடித்துவருகிறார்கள். பாதிக்குமேல் வளர்ந்துவிட்ட இப்படத்தை மகேந்திரபரான் டைரக்ட்செய்து வருகிறார். இப்படத்திற்கு சுசிலா என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

—

### புதிய படம்

'யாருக்குச் சொந்தம்' என்ற படத்தைத் தயாரித்துவரும் மாடர்ன் தியேட்டர்சார் மற்றொரு படத்தையும் தயாரிக்கவிருக்கிறார்கள். 'மா.ரா' திரைக்கதை வசனம் எழுதும் இப்படத்தில் மனோகர், ஏ. கருணாநிதி, ராஜ்யஸ்ரீ ஆகியோர் நடிப்பர்.


### தேக்கடியில் வெளிப்புறக் காட்சிகள்

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனும் சாவித்திரியும் ஜோடியாக நடித்து வரும் சௌரிபடநிலையத்தின் முதலாவது சமூகப்படம் வளர்ந்து வருகிறது. இப் படத்தின் வெளிப்புறக் காட்சிகள் இவ்வாரம் தேக்கடியில் படமாக்கப்பட்டன. புரட்சிநடிகரும் சாவித்திரியும் தோன்றும் காதல் காட்சிகளும் நம்பியார், ராஜசுலோசன சம்பந்தப்பட்டகாட்சிகளும் தேக்கடியில் படமாக்கப்பட்டன.

—

### எம். ஏ. வி. யின் படத்தில் சிவாஜி

எம். ஏ. வி. பிக்சர்ஸார் அடுத்ததாகத்தயாரிக்கும் படத்தில் சிவாஜிகணேசன் கதாநாயகனாக நடிப்பார். தேவிகா கதாநாயகியாக நடிப்பார்.



தலைவலி, காய்ச்சலானாலும் கனிமொழியாள் பக்கத்தமர்ந்து தளிர்க் கரத்தால் தடவிவிட்டால் நோயெல்லாம் பறந்துவிடாதோ! சினிமாஸ் திரைகளில் காட்சியளித்துக் கொண்டிருக்கும் 'அங்குலிமாலா' என்ற படத்தில் பாரத்பூஷனும் நிம்மியும் தோன்றும் ஒரு கட்டம்.

## 8 விக்கெட் நஷ்டத்துக்கு 193 ஓட்டங்கள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் யங்லயன்ஸ் கோஷ்டிக்கும், நல்லூர் ஸ்புட்னிக்கோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட்போட்டி நேரமின்மையால் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. ஸ்புட்னிக் கோஷ்டியினர் தமது முதல் ஆட்டத்தில் எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 79 ஓட்டங்களை பெற்றனர். அதன்பின் ஆடிய யங்லயன்ஸ் கோஷ்டியினர் தமது முதல் ஆட்டத்தில் 8 விக்கட்டுகளை இழந்து 193 ஓட்டங்களை எடுத்து, மென்பந்தாட்டப் போட்டியில் ஓர் புதிய சாதனையை நிலைநாட்டினர்.

யங்லயன்ஸ் கோஷ்டியைச் சேர்ந்த டேவிட், சந்திரன், பாஸ்கரன், அல்பிறட் (காப்டன்), அன்ரனி, பத்மநாதன், தேவராசா, பெனடிற் (ஆட்டமிழக்கவில்லை), பத்மலிங்கம் (ஆட்டமிழக்கவில்லை), ஜீவா (ஆட்டமிழக்கவில்லை) ஆகியோரும் திறமையாக விளையாடினர். மத்தியஸ்தராக திரு. தேவா, திரு. பத்மன் ஆகியோர் கடமையாற்றினர்.

## டாக்ஸியில் கஞ்சா

வத்தளை, செவ்வாய்

டாக்ஸியில் கொண்டுசெல்லப்பட்ட 30 ரூத்தல் கஞ்சா வத்தளை பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

கொழும்பிற்கு சென்றுகொண்டிருந்த டாக்ஸியை சந்தேகத்தின் பேரில் பொலிசார் சோதனைசெய்தபோது கஞ்சா பிடிக்கப்பட்டது.

கஞ்சா, சாக்கில் கட்டப்பட்டு. டாக்ஸியின் பின் ஆசனத்தின் கீழ் வைக்கப்பட்டிருந்தது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### புதன் 22-5-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினெட்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 ஏ. சங்கரஐயர் — வயலின், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 பி. சவரிமுத்து — பேச்சு, 9-30 எஸ். விஜயலட்சுமி — பாட்டு, 10-15 தேர்ந்தஇசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குறிப்புகள், 7-35 மணித்திருநாடு (சென்னை அஞ்சல்).

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்தியஇசை, 1-50 மெல்லிசை, 2-10 காருகுறிச்சி எஸ். நாராயணன் — வீணை.

மாலை 5-15 புல்லாங்குழல் — கிளாரினெட், 5-45 வாத்திய இசை, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 செய்திஅரங்கம், 7-45 'வீரஜடாயு' — இசை நாடகம், 8-00 காருகுறிச்சி எஸ். நாராயணன் — வீணை, 9-15 நல்லுரை, 9-20 பொன்னொளிர் பாரதம் — இசை நிகழ்ச்சி, 9-50 இசைமாலை.

## கம்பர்மலை கொலை வழக்கு

மாவிட்டபுரம், திங்கள்

வல்வெட்டித்துறை பொலிஸ் பகுதியைச் சேர்ந்த கம்பர்மலையில் இம்மாதம் 4-ம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற துப்பாக்கிச் சம்பவம் சம்பந்தமாக குற்றப்பத்திரிகை பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் மாஜஸ்டிரேட் திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் இன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் வல்வெட்டித்துறைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த கொம்மந்துறை வாசியான ராஜதுரை அப்புத்துரை என்பவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த முருகன் தங்கவேலு என்பவரைக் கொலை செய்ததாகவும், இக்கொலைக்கு உதவிபுரிந்ததாக கம்பர்மலையைச் சேர்ந்தவரும் கிராமசபை அங்கத்தவருமான சின்னையா சிவராசா, அதே ஊரைச் சேர்ந்தவரும் கிராம சேவகருமான நல்லதம்பி சந்திரன் ஆகியோர்மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இவ்வழக்கு விசாரணைக்காக அடுத்த மாதம் முதலாந் திகதிக்கு ஒத்திவைக்கபபட்டுள்ளது, முதலாம் எதிரிக்காக திரு. என். நடராசாவும், இரண்டாம் மூன்றும் எதிரிகளுக்காக திரு. வி செல்லத்தம்பியும், ஆஜரானர்கள். வழக்கறிஞர் திரு. கே. கே. பாலசுப்பிரமணியத்தின் உதவியுடன் வல்வெட்டித் துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு, வி. ராஜரத்தினம் வழக்கைத் தாக்கல் செய்தார்.

## கடலரிப்புத் தடைக்கு முக்கியத்துவம்

கொழும்பு, செவ்வாய்

நாட்டின் தென்கரையோரப் பகுதிகளில் ஏற்பட்டுவரும் கடலரிப்பை தடை செய்வதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என பிரதமமந்திரி, மராமத்து இலாகா உயர்தர அதிகாரிகளைக் கேட்டுள்ளார். சென்ற சனிக்கிழமை மராமத்துப்பகுதி, நீர்ப்பாசன அதிகாரிகளையும் உள்நாட்டமைச்சின் நிரந்தரக் காரியதரிசியையும் அழைத்து மகாநாடு ஒன்று நடாத்தினர். கடலரிப்பைத் தடைசெய்வதற்கு ரூபா 200,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

## சாதி அடிப்படையில் மந்திரிகள் நியமனம்

### எம். பி. குற்றச்சாட்டு

கொழும்பு, செவ்வாய்

"கடந்த காலங்களில் மட்டுமன்றி, இப்பொழுதுங்கூட இனத்தவர்களும் நண்பர்களும் சாதி அடிப்டையிலுமே மந்திரிப் பதவிக்கு நியமிக்கப்படுகின்றனர்" என்று பொரளை எம். பி. டாக்டர் டபிள்யு. டீ. டீ. சில்வா ரம்புக்கனை எம். பி. திரு. அசோகா கருணரத்தினவிற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அக் கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:

"அரசாங்கம் இவ்விதம் சாதி அடிப்படையிலுள்ள சோஷலிசத்தை நீடித்துக்கொண்டு போனல், சர்வாதிகாரம் அமைந்த வலதுசாரி அரசாங்கமே ஏற்படும். மக்கள் மன்றமாகிய பாரளுமன்றத்தை மூடியும் மக்களால் தெரியப்படாதவர்களை மந்திரிகளாக்கயும் நாங்கள் சோஷலிசத்தை நிலைநாட்ட முடியாது.

உயர்ந்தசாதி யென்ருலும்சரி தாழ்ந்தசாதியென்ருலும்சரி தற்பொழுதுள்ள நிலைமையில் அரசாங்கத்தில் குறைந்த தராதரத்தில் உள்ளவர்கள் உயர்ந்த நிலைக்குவர எதுவித சந்தர்ப்பமுமில்லை. அரசாங்க நிர்வாகம் சாதி அடிப்படையிலும், சொந்தக்காரர்களுக்கும் இனத்தவர்களுக்கும் என்ற ரீதியிலுமே ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது.

நிதி மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசியாக இருந்த போது நீங்கள் அச்சமின்றி நேர்மையுடன் சாதி, குடும்ப, கட்சி வேறுபாடின்றி பணியாற்றினீர்கள்.

## சீனவுக்கு யூகோ. ஆட்சேபம்

பெல்கிரேட், மே 21

நவசீனஅதிபர் லீ ஷா சியும் வடவியட்நாம் அதிபர் ஹோசிமின்னும் ஹனேயில் விடுத்த ஒரு கூட்டறிக்கை சம்பந்தமாக யூகோஸ்லேவியா சீனவுக்கு ஆட்சேபம் தெரிவிக்கவிருக்கிறது. மார்க்ஸிஸத்துக்கும் லெனினிஸத்துக்கும் மாருக யூகோஸ்லேவியா நடத்துகொள்வதாகவும் உலக கம்யூனிஸத்தையும் சோஷலிசத்தையும் உருக்குலைக்கும் முறையில் யூகோஸ்லேவியா நடந்துகொள்வதாகவும் கூட்டறிக்கை குற்றம்சாட்டியது.


ஹார்லிக்ஸ் அளிக்கும் நன்மைக்கு ஒரு உதாரணம்:

சோதிடப்படி எனக்கு நல்ல காலம் இல்லை—





"என் நிலைமை தெரிந்தால் இப்படி கேலிசெய்ய மாட்டீர்கள்," என்றேன். "ஏன் தெரியாது? தூக்கமும் அசதியுமாய் வீட்டு வேலைகளை கூட அவதானிக்க முடியாமல் கஷ்டப்படுகிருய்" என்ருள் சித்தி. "என் உடம்பில் வேறு கோளாறு இல்லையா?" என்றேன். "டாக்டரைத்தான் கேட்க வேண்டும்" என்பது சின்னம்மாவின் பதில்.


"டாக்டர் என்ன சாதித்துவிடப் போகிருர்." என்றேன் சலிப்புடன். ஆனுல் சின்னம்மா விடாப்பிடியாக டாக்டரிடம் அழைத்துச் சென்ருள். டாக்டர் சொன்னதும் எனக்குச் சரி யென்றுதான் தோன்றியது. "உங்கள் உடம்பில் கோளாறு ஒன்றும் இல்லை. உங்களுக்கு சோர்வும், பலவீனமும் தோன்றுவது உடலுக்குத் தேவையான போஷாக்குக் கிட்டுவதில்லை என்பதற்கு அறிகுறி. நீங்கள் தினமும் ஹார்லிக்ஸ் அருந்தி வரவேண்டும்" என்ருர் டாக்டர்.


நோயாளிகளுக்கும், பலவீனர்களுக்கும் டாக்டர்கள் சிபார்சு செய்யும் ஹார்லிக்ஸையா நானும் அருந்துவது! எனக்கு என்னவோ போலிருந்தது. அன்றிரவு நண்பரிடம் இதைப் பற்றிக் கேட்டேன். "டாக்டர் சொன்னபடியே செய்யுங்கள்" என்று அடித்துச் சொன்ருர் நண்பர்.


நல்ல நாளும் கிழமையும் கூடிய தினத்தில் ஹார்லிக்ஸ் அருந்தத் தொடங்கினேன். அருந்தத் தொடங்கிய நாள் தொடக்கம் எனக்குச் சோர்வே இல்லை. இவ்வளவு மகிழ்ச்சியும் சுறுசுறுப்பும் எனக்கு இதுவரையில் இருந்ததே இல்லை. சரோஜா சின்னம்மாவுக்கும் ஒரே ஆனந்தம்! டாக்டர் என்னை ஹார்லிக்ஸ் பருகும்படி சொன்னது என்னுடைய நல்ல காலம் தான்!




ஹார்லிக்ஸ் அதிக சக்தி யளிக்கிறது!

# இலங்கை தமிழருக்கு 'நாம் தமிழர்' ஆதரவு

## ஹிந்தி எதிர்ப்புக்கு ஈரோடு சின்னசாமி தளபதி

கொழும்பு, திங்கள்

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவளிப்பதென இந்தியாவிலுள்ள "நாம் தமிழர்'' கட்சி தீர்மானித்திருக்கிறது. இதுசம்பந்தமாக கட்சியின் நிர்வாகக் கமிட்டி நிறைவேற்றியுள்ள ஒரு தீர்மானத்தில், "இலங்கையில் தங்கள் மொழி, அரசியல் உரிமைகளுக்காகப் போராடும் தமிழ களுக்கு ஆதரவு" அளிப்பதாய்க் கூறப்பட்டுள்ளது. கட்சித் தலைவர் ஸ்ரீ. எஸ். பி. ஆதித்தன் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

மற்றோர் தீர்மானத்தில் ஹிந்தியையும், ஆங்கிலத்தையும் ஒழிப்பதன்மூலம் தமிழைக் காப்பாற்ற நேரடிப் போராட்டம் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இதுசம்பந்தமான அவசிய நடவடிக்கை எடுக்குமுகமாக ஈரோடு சின்னசாமி தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

—

## தமிழ் காங்கிரஸும் இடதுசாரிகளும்

கொழும்பு, திங்கள்

தமிழ் காங்கிரஸின் யாழ்ப்பாண மாவட்ட கிளையின் தலைவர் திரு. ஆ. த. மூர்த்தி எழுதுவதாவது:-

இடதுசாரிக் கட்சியினருடன் தேர்தல் ஒப்பந்தம் செய்துகொள்ள காங்கிரஸ் உத்தேசித்திருப்பதாக 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியான செய்தியை மறுத்து நான் கூறிய கருத்துப்பற்றி ஒரு தப்பபிப்பிராயம் ஏற்பட்டுள்ளதாக அறிகிறேன். இடதுசாரியினர் தங்கள் மொழிக் கொள்கையை இன்னும் திட்டமாக உருவாக்கி வெளியிட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் இப்பிரச்னையை சீக்கிரம் தீர்க்க வேண்டுமென்று காட்டும் மனப்பான்மையையே வரவேற்பதாகக் கூறினேனேயன்றி, இன்னும் அவர்கள் உருவாக்காத கொள்கையை அல்ல. நாடெங்கும் தமிழ் மொழிக்கு சம உரிமை வேண்டுமென்ற தமிழ் காங்கிரஸின் திட்டமான மொழிக் கொள்கையில், எவ்வித மாறுதலும் இல்லை என்பது இத்தால் தெளிவாக்க விரும்புகிறேன்.

—

## விவேகானந்தர் பாறைக்கு செல்லத் தடை

கன்னியாகுமரி, மே 20

கன்னியாகுமரி கடலிலிருந்து 200 யார் தூரத்திலிருக்கும் விவேகானந்தர் பாறைக்கு எவரும் செல்லத் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாறையில்தான் சுவாமி விவேகானந்தர் தியானம் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அங்கு நிறுவப்பட்டிருந்த நினைவுக்கல் சில தினங்களுக்கு முன் காணமற் போனதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

## காங்கிரஸ் வெற்றி

லக்ஷ்மணபுரி, மே 20

உத்தரப்பிரதேசத்தில் நடைபெற்ற 2 உபதேர்தல்களில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது.


வெற்றிகரமான 4-வது வாரம்!

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றியீட்டிய திரைக்காவியம்!

கிங்ஸ்லி (கொழும்பு) ரீகாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) மொடர்ன் (பண்டாரவளை) லக்ஷ்மி (இரத்தினபுரி) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ராகலை)

★ மூன்று உள்ளங்களுக்கு இடையே ஒரு போராட்டம்

★ பாசத்திற்கும் காதலுக்கும் ஏற்பட்ட பயங்கர சோதனை!



சிவாஜி கணேசன்
S. S. ராஜேந்திரன்
பி. சரோஜாதேவி
ஆர். விஜயகுமாரி
எம். ஆர். ராதா
வி. நாகையா
எம். வி. ராஜம்மா
பி. எஸ். வீரப்பா
புஷ்பலதா

நடித்த

பி. எஸ். வி. பிக்சர்ஸ்

ஆலய மணி

டைரக்ஷன் கே. சங்கர்

இசை விஸ்வநாதன் — ராமமூர்த்தி

மனோகரா (யாழ்ப்பாணம்)

கே. பாலாஜி
அஞ்சலிதேவி
நடித்த

நாகநந்தினி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மே மாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## அமெரிக்க தூதரகம் முன் பௌத்தர்கள்

### தென் வியட்னும் சம்பவங்களுக்கு ஆட்சேபம்

கொழும்பு, திங்கள்

பௌத்தர்களுக்கு எதிராக தென் வியட்னும் அரசாங்கம் மேற்கொள்ளும் செயல்களைக் கண்டிக்கும் பொருட்டு இன்று காலை கொழும்பிலுள்ள அமெரிக்க தூதராலயம்முன் சுமார் 20 பௌத்த பிக்குகள் அமர்ந்திருந்தனர்.

"அமெரிக்க பணம், ஆயுத உதவி பெற்றுள்ள தென்வியட்னமில் பௌத்தர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை விசாரணை செய்யும் பொருட்டு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்கவேண்டுமென்றும்" இந்த பிக்குகள் தெரிவித்துள்ளனர். "பௌத்தர்களைக் கொல்லவேண்டாம்" என்று எழுதப்பட்ட சுலோகங்களை அவர்கள் வைத்திருந்தனர்.

இலங்கையிலுள்ள வியட்னும் சங்கத்தின் தலைவருக்கு, வியட்னும் அதிபர் அனுப்பியுள்ள ஒரு செய்தியில், பௌத்தர்கள் எவரும் துன்புறுத்தப்படவில்லையென்றும் பௌத்தர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள் என்பது ஆதாரமற்றதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

—

## சீன எதிர்ப்பு பரவுகிறது

### 14 பேர் பலி

ஜாகர்த்தா, மே 20

மேற்கு ஜாவாவிலும், கிழக்கு ஜாவாவிலும் சீனர்களுக்கெதிராக மேலும் பல ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. மேற்கு ஜாவாவிலுள்ள கருட்டில் 2 பொலீசார் உட்பட 14 பேர் கொல்லப்பட்டதாயும், கிழக்கு ஜாவாவிலுள்ள சுரபாயர நகரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றதின் விளைவாக மாலை முதல் காலை முதல் ஊரடங்குச் சட்டம் போடப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது. ஜாகர்த்தாவுக்கும், பாண்டுங்குக்கு மிடையேயுள்ள வீதிகளில் சீனர்களுக்குச் சொந்தமான கார்கள் கொளுத்தப்பட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

—

## 498 கைதிகள் விடுதலை

புதுடில்லி, மே 20

சீனு, இன்று 498 இந்தியப் போர்க்கைதிகளை இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்தது.

# எச்சரித்து விடுதலை

## ஸ்ரீ வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

சிங்கள 'சிறி'யுடன் உள்ள இலக்கத் தொடரை தமது மோட்டார்கார் இலக்கமாக, திரு. இ. மகாதேவா ஏற்றுக் கொண்ட பொழுது அதில் உள்ள சிங்கள எழுத்தை மறைத்தது பிழையே. ஆகவே திரு. மகாதேவாவைக் குற்றவாளியாகக் காண்கிறேன். ஆனால் இரண்டு வருடங்களுக்கு முன்பு இருந்த அரசியல் சூழ் நிலையில் சிங்கள 'சிறி'யை மறைத்து தமிழில் 'சிறி' பொறிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எதிரிக்கு ஏற்பட்டது. இன்று அந்நிலை மாறிவிட்டது. ஆகவே எதிரியை எச்சரிக்கை செய்து விடுதலை செய்கிறேன்.

இவ்வாறு யாழ்ப்பாணம் கூட்டு மாஜிஸ்ரேட் திரு. வி. எம். குமாரசாமி, நேற்று நடைபெற்ற சிங்கள சிறி மறைப்பு வழக்கில் தீர்ப்பளிக்கும்போது குறிப்பிட்டார்.

இவ்வழக்கில், திரு இளையதம்பி மகாதேவா, 2-3-61-ல் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் 24 (2) வது சரத்தை மீறி அன்னுருடைய மோட்டார் காரிலுள்ள சிங்கள 'சிறி' 9040-ல் உள்ள சிங்கள சிறியை ஒரு கறுப்பு அட்டையால் மறைத்து தமிழ் 'சிறி'யை அவ் வட்டையில் பொறித்ததாகவும், அக்காரின் சொந்தக்காரராகவும், சாரதியாகவும், முன்னும், பின்னும் உள்ள இலக்கத் தகடுகளில் உள்ள சிங்கள 'சிறி'யை மறைத்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

இவ்வழக்கில் தீர்ப்பு கூறும் பொழுது திரு. வி. எம். குமாரசாமி கூறியதாவது:-

இவ்வழக்கில், சிங்களத்தில் உள்ள 'சிறி' ஒரு எழுத்தோ, பல் எழுத்துக்களோ கொண்டதல்லவென்றும், அது ஓர் சொல் என்பதற்கும், நிபுணத்துவ சாட்சியம் உண்டு. இதில் மோட்டார் ரத பதிவு காரியஸ்தர், மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் 9-ம் பிரிவு 1 (ஏ) சட்டத்தின்படி மோட்டார் ரதத்திற்கு தொடர் இலக்கம் கொடுப்பதில் தவறிவிட்டார். இதை எதிரி எடுத்துக்காட்டி, வழக்கை நிலைநாட்ட முடியாது என்றும் கூறியுள்ளார். மேலும், எதிரி தரப்பின் வாதத்தில், இந்த இலக்கத்தகடு கறுப்பிலே இருக்க வேண்டும் என்றும், அதன் மேல் வெள்ளை நிறத்தால் இலக்கமும் எழுத்தும் எழுதப்பட வேண்டுமென்றும் சட்டத்தில் உண்டு என்பதை காட்டியுள்ளனர். அதன்படியே கறுப்பு அட்டையினல் சிங்களத்தில் உள்ள 'சிறி'யை மறைத்து அவ்வட்டையின் மேல் தமிழ் 'சிறி' பொறிக்கப்பட்டு இருந்தது. இக்கார், உள்ள பகுதிகளில் உள்ள மக்கள் அறியக் கூடிய மாதிரி இலக்கத் தகட்டில் தமிழில் எழுத்து குறிக்கப்பட்டிருந்தது. அதனல் அப்பகுதி மக்களுக்கு அவர் பெரிய சேவை செய்தவராவர் என்றும் எடுத்துக் காட்டியுள்ளனர்.

ஆனல், இதிலேயுள்ள குற்றச் சாட்டு இலக்கத்தகட்டில் உள்ள சிங்கள 'சிறி'யை மறைத்ததுவே.

எதிரி சிங்கள சிறி இலக்கத் தொடரை ஏற்றுக் கொண்டபொழுது அதை மறைத்ததினல் மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் 24-ம் பிரிவு 2-ம் சரத்து 203-ம் அத்தியாயத்தை மீறியுள்ளார். ஆகவே எதிரியைக் குற்றவாளியாகக் காண்கிறேன். ஆனல் சிங்கள சிறியை எதிர்த்த ஒரு அரசியல் சூழ் நிலையிலேயே எதிரி இக் குற்றத்தை செய்துள்ளார். இப்பொழுது அந்நிலை மாறியுள்ளது. ஆகவே அவரை எச்சரிக்கை செய்து விடுதலை செய்கிறேன்.

அரசாங்கசார்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரன் ஆஜரானர். எதிரிதரப்பில் திரு. ஆர். விசுவநாதன், திரு. எஸ். இராசையா ஆகியோரின் அனுசரணையுடன் திரு. எஸ். கதிரவேற்பிள்ளை ஆஜரானர்.

—

## 400 நீக்ரோக்கள் கைது

வாஷிங்டன், மே 20

வட கரோலினவில் இன பேதத்துக்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய நீக்ரோக்கள் 400 பேர் கைது செய்யப்பட்டனர்.

—

## 'தமிழர்களை விரட்டினல் நாடு முன்னேறும்'

### —ராஜரத்ன

சொர்ணதோட்டம், செவ்வாய்

"பிரதம மந்திரிக்கும், அரசாங்க கட்சிக்கும், பாராளுமன்றம் பெரிய தலையிடியைக் கொடுத்துள்ளது. அதனல்தான் பாராளுமன்றம் நீண்ட காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சிம்மாசனப்பிரசங்கத்தையும், வரவு செலவுத் திட்டத்தையும் எதிர்பார்க்கும் மக்களுக்கு, இது ஒரு அபசகுனமாகும்" என்று நியங்கம் தொறவில் நடைபெற்ற கூட்டத்தில் வெலிமடை எம். பி. திரு. கே. எம். பி. ராஜரத்ன பேசுகையில் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கூறியதாவது: பொதுமேடைகளில் சர்வாதிகாரத்தைப்பற்றி சிலர் பேசுவதும் பாராளுமன்றம் தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டிருப்பதும், மக்கள் மனதில் கவலையை உண்டுபண்ணியுள்ளது. பிரதம மந்திரியும், மந்திரிசபையும், தாங்கள் தகுதியற்றவர்கள் என்பதை நிரூபித்துவிட்டார்கள்.

இந்த நாட்டை முன்னேற்ற விரும்பும் எந்த அரசாங்கமும், முதலில் தோட்டத்திலுள்ள தமிழர்களையும், ஐரோப்பியர்களையும் விரட்டிவிடவேண்டும்.

# டாக்டர் சுகர்னே ஆயுட்கால ஜனதிபதி!

## பாண்டுங்கில் பிரகடனம்

பாண்டுங், மே 20

நேற்று பாண்டுங்கில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் டாக்டர் சுகர்னே ஆயுட்கால ஜனதிபதியாகப் பிரகடனம் செய்யப்பட்டார் பிரதம அரசியல் சட்ட உறுப்பான மக்கள் ஆலோசனைசபை காங்கிரஸ், டாக்டர் சுகர்னே புரட்சியின் பெரிய தலைவராதலால், அவர் அவ்வாறு நியமனமாக விருப்பதாக நியமனப்பத்திரத்தில் குறிப்பிட்டிருந்தது.

நியமனப்பத்திரத்தை டாக்டர் சுகர்னே பெற்றுக்கொண்டபோது, ஆயிரக்கணக்கான மக்கள் ஆரவாரித்துக் கரகோஷம் செய்தனர். ஜனதிபதி சுகர்னே அப்போது பேசுகையில், இந்தோனேஷியப் புரட்சி இன்னும் பூர்த்தியடையவில்லை என்றும், ஒன்றிரண்டு வருடங்களில் இது பூர்த்தியாகக்கூடிய விஷயமல்லவென்றும் குறிப்பிட்டார்.

62 வயதான டாக்டர் சுகர்னே, டச்சு ஆதிக்கத்திலிருந்து இந்தோனேஷிய சுதந்திரம் பெற்ற 1949-ம் ஆண்டு முதல், அந்நாட்டின் ஜனதிபதி பதவி வகித்துவருகிறார்.